MASTER NEGATIVE NUMBER

6122.67

வைசியமித்திரன்
புத்தகம் 5, இலக்கம் 29
February 14, 1916

Record no. 1102

Vaiciyamittiran̲
Puttakam 5, ilakkam 29
February 14, 1916

Record no. 1102

REG. NO. M.—940.

உ
சிவமயம்.
வேலுமயிலும் துணை.

சந்தா விபரம்.
வருடம் 1-க்கு ... ... ரூ 3—8—0
மாதம் 6-க்கு ... ... ரூ 2—0—0
இந்தியா, இலங்கை, பர்மா, ஸ்ட்ரெயிட்ஸ் செட்டில்மெண்ட் தவிர்ந்த வெளிநாடுகளுக்கு வருடம் 1-க்கு ரூ 4—8—0
(தபால் கூலியுட்பட)

வைசிய மித்திரன்
THE VYSIA MITRAN.

விளம்பர விகிதம்
பத்தி 1-க்கு மாதம் 1-க்கு ரூபாய் 20-0-0.
நீண்டகாலம் விளம்பரம் செய்வோர்கள் எழுதிக் குறைந்த விகிதம் தேரிந்து கொள்ளலாம். சில்லரை விளம்பரங்களுக்கு தடவைக்கு வரி 1-க்கு அணா 2.

பிரதி சோமவாரமும் பிரசுரிக்கப்பெறும்.

"எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினு மப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருக்குறள்.

புத்தகம் 5. } தேவகோட்டை ராக்ஷஸ-ஹு மாசி-மீ 2-உ திங்கட்கிழமை 1916-ஹு பிப்ரவரி-மீ 14-உ { இலக்கம் 29.

9

ஹைகோர்ட்டு தீர்மானங்கள்.

இப்பெயர் புனைந்த மாதாந்த தமிழ் லா ஜர்னல் 2-வது வாலியூம் சென்ற செப்டம்பர் மாதமுதல் நடைபெற்று வருகிறது. அக்டோபர் மாத சஞ்சிகை முதல் ஒவ்வொன்றின் முற்பாகத்திலும் குறைந்தது 8 பக்கங்களுக்குக் குறையாமலும் பல கோர்ட்டு சர்க்குலர் குறிப்புகள் கடைசியில் 4 பக்கங்களுக்குக் குறையாமலும் மத்தியில் ஹைகோர்ட்டு தீர்மானங்களும் வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. முன்பணம் அனுப்புவோர்களுக்கு வருட சந்தா ரூபா 5; 6 மாதங்களுக்கு ரூபா 2—12—0 சந்தாத் தொகை வி. பி. மூலமாகவே பெற்றுக்கொள்ளப்படும். சந்தாதாரர்கள் சேர்க்க ஏஜண்டுகள் தேவை. உயர்ந்த கமிஷன் கொடுக்கப்படும். முதல் வாலியூம் 830 பக்கங்கள் கொண்டது காலிகோபயிண்டு செய்தது. வி. பி. சார்ஜுடன்பட ரூபா 5—4—0.

A. நடேச பிள்ளை வக்கீல், மாயவரம். C. Sundaram Iyer B A, B L. வக்கீல், மாயவரம்.
Editors, Proprietors, & Publishers.

விநோதக் குறிப்புகள்.

தலை வணங்குவதால் சௌகர்யம்.

ஒரு குண்டு வரும்பொழுது ஊரிலின்ற சேனுபதி தலை வணங்கினன். அது அவருக்குப் பின்னால் இருந்த போர்வீரனுடைய தலையைக் கொண்டுபோய் விட்டதைப்பார்த்து "தலை வணங்கினால் உயிர் தப்பலாம்." என்று கூறினர்.

அரசனும் குலாமும்.

தென்னுலிராமனைப்பார்த்த அரசன், "நீ கிட்டாவையா?" என்று வினவினர்.

"மஹாராஜா, அரசனுக்கும் குலாமுக்கும் உள்ள வித்யாஸங்கூட தெரியாதே எனக்கு" என்று விடைகொடுத்தான் தென்னுலிராமன்.

சீக்கிரமான பதில்.

கணக்கில் அதிபுத்திமானுகிய ஒருவனைப் பார்த்த குறம்புக்காரன், "ஒரு பன்றி 100 இராத்தல் இருக்குமாயின் காட்டுப்பன்றி எவ்வளவு இராத்தல் இருக்கும்?" என்று வினவினன். "ஒரு தராசில் உடனே ஏறுவீராயின் சீக்கிரமே பதில் கொடுக்கிறேன்." என்று விடைகொடுத்தான்

வேறுவேலை யேது?

தான் செய்தகாரியத்தைப் பன்முறையும் உரைக்கும் வாடிக்கையுள்ள ஒரு தனவந்தன் தன்னுடைய தோட்டத்தில் தன்னால் நடப்பட்ட கன்றுகள் எவ்வளவு சீக்கிரம் மரங்களாகின்றன என்று அடிக்கடி தோட்டக்காரனிடம் கூறினர். பல தடவை பொறுத்துக்கொண்டிருந்த தோட்டக்காரன், "அவைகளுக்கு அதைத்தவிர வேறு வேலை என்ன?" என்று கோபம் கலந்த நகையுடன் பதில் சொன்னன்.

சரியான தண்டனை

பெருங்கால் வியாதியால் பிடிக்கப்பட்ட தனவான் ஒருவரின் செருப்பை யாரோ திருடிக்கொண்டுபோய் விட்டானென்று அவருடைய வேலையாள் வைதுகொண்டிருந்தான். அதைக்கேட்ட தனவான் வேலையாளைப் பார்த்து, "வடேபயா நீ ஏன் அவனை வைகிறாய்? எப்படியாவது அச்செருப்பு அவனுடைய காலுக்குச் சேருமா [illegible] செய்யட்டும்" என்றார்

நல்ல புத்திமதி.

தன்னுடைய தகப்பனர் தேடிவைத்த பொருட்களை யெல்லாம் செலவுசெய்து விட்ட ஒருவாலிபன் மற்றவனைப்பார்த்து, "நீ அணிந்துகொண்டிருக்கும் சட்டை உன் தாத்தாவினுடையதுபோல இருக்கிறதே" என்று கூறி கேலிசெய்தான்

"இதுமட்டுமா வைத்திருக்கிறேன்? என் தாத்தாவினால் வைக்கப்பட்டுள்ள சகல சொத்துகளையும் மடையனைப்போல் செலவு செய்யாமல் வைத்திருக்கிறேன்" என்றான் முதல் பேசினவன் மௌனஞ் சாதித்துத் தன் வழியே சென்றான்

முட்டாளின் செயல்

ஒரு பிரபல [illegible] மற்றும் பலரும் ஒரு விருந்துக்கழைக்கப்பட்டிருந்தனர் [illegible] எல்லோரும் சாப்பிட்டுக்கொண்டு வேடிக்கையாகப் பேசுகையில் வித்வான் பேசியபோதெல்லாம் ஒருவன் ஹா! ஹா!! என்று [illegible] இருந்தான். அதாவது, வித்வான் சொல்லிய தன் அத்தனை ஆழமான கருத்தை [illegible] அறிந்துகொண்டதாகப் பிறர் நினைக்கவேண்டுமென்ற அவ்விதம் செய்தான். [illegible] நேரம் வரையில் பொறுத்த வித்வான் கடைசியாக "ஐயா நீங்கள் அறிந்துகொள்ளும் விஷயம் நானொன்றும் பேசவில்லையே!" என்றார்.

சுருங்கச்சொல்லலின் பயன்.

மதுரையில் ஒரு பிரபல வைத்தியர் இருந்தார். அவரிடம் யாராவது வியாதியைப்பற்றிப் பிரமாதமான இராமாயணம்போல் கூறினால் கோபம் வந்துவிடும். அவரிடம் தன் கையை எரித்துக்கொண்ட பெண்பிள்ளை கையைநீட்டி "எரித்துக்கொண்டேன்" என்றான். அதற்கு வைத்தியர், "வாழைக்குருத்து கட்டு" என்று கூறிவிட்டார். பிறகு சிலநாட்கள்கழிந்து அவள் மறுபடியும்வந்து, "கொஞ்சம் சொஸ்தம்" என்றான் "மறுபடியும் கட்டு" என்று விடைகொடுத்தார் வைத்தியர். பூர்ண குணமானபிறகு அவள்வந்து, "எம்பாகலனே?" என்றான். "ஒன்றுமில்லை" என்றார் வைத்தியர். பிறகு அவள் ஒருத்தயே, புத்திசாலி யென்று கொண்டாடினர்.

விசேஷக் குறிப்புகள்.

வித்யா விஷயம்.

பரோடா இராஜ்யம் தனது வரும்படியில் 100 ல் 10 வித்யாவிஷயத்தில் செலவுசெய்கிறது. பிரிட்டிஷ் இந்தியா தனது ஜனங்களுக்குத் தலையொன்றிற்கு 1 அணு செலவு செய்கிறது. பரோடாவோ 12 அணு செலவு செய்கிறது.

சுவராஜ்யம்.

"சுவராஜ்யம்" என்னும் பதமானது 1906-ம் வருஷம் இந்திய நேஷனல் காங்கிரஸில் தாதாபாய்நௌரோஜியவர்களால் முதன் முதல் பிரயோகிக்கப்பட்டது என்ற விஷயம் ஒவ்வொருவருடைய ஞாபகத்திலும் இருக்க வேண்டும்.

ருஷிய வாடிக்கை.

தலையில் தொப்பியுடன் சாப்பிடுவதும், உப்பு சீசாவை தன்னிடம் இழுத்துக்கொள்வதும், கால்மேல் கால் போட்டுக்கொள்வதும், மேஜையின் ஒரு மூலையில் உட்காருவதும், மேற்சட்டையுடனுவது கைவிரல் மூடியுடனுவது உள்நுழைவதும், ருஷியருக்குக் கோபத்தை யுண்டாக்குமாம்.

இரண்டாயிர வருஷங்களுக்கு முன் இந்திய நாகரீகம்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னூறு வருஷங்களுக்கு முன்னரே சந்திரகுப்தனுடைய இராஜ்ய பரிபாலனகாலத்தில் அதிபுத்திமானுகிய சாணக்யன், இராஜரீகத்திற்கு முக்யமான அம்சங்களானவை ஏழு என்றும், அவை, பெரிய தேசம், அரசன், மந்திரி, கோட்டை, கஜானு, சைன்யம், சிநேகிதன் முதலியனவே யாகும் என்றும் கூறுகிறார்.

உலகத்தில் பெரிய புஸ்தகம்.

சீனபாஷையில் எழுதப்பட்ட அகராதியே உலகத்திலுள்ள புஸ்தகங்களையெல்லாம் விடப் பெரியது. இவ்வகராதி 11,100 புஸ்தகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. 1403ம்வருஷத்தில் சீன சக்ரவர்த்தியாக இருந்த யங்லோ என்பவருடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்ய வேண்டி 2169 வித்வான்களால் நான்கு வருஷகாலத்தில் வரையப்பட்டதாகும். இது 22,897 பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதில் தேச சரித்திரம், தத்வம், கல்வி, வான சாஸ்திரம், பூகோளசாஸ்திரம், உலகத்தயசாஸ்திரம், பௌத்தமதம், தயோசமதம், வைத்தொழில், சித்திரம் முதலிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இவ்வகராதியின் புஸ்தகங்கள் அரையங்குலம் கனம் இருக்கின்றன. அதாவது இந்தப்புஸ்தகங்களை ஒன்றன்மேலொன்றாய் அடுக்கிவைத்தால் 450 அடி உயரமிருக்கும். சமீபத்தில் வெளிவந்த என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா என்னும் பெரிய ஆங்கில அகராதியில் 22,000 பக்கங்கள் இருக்கின்றன. இதுவே பெரிய புஸ்தகம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் இந்த சீன அகராதியிலோ எனின் 9,17,480 பக்கங்கள் உண்டு, ஆனால் இவ்வளவு விலாக்யமான புஸ்தகம் சீனுவிலே 1900 வருஷத்தில் நடந்த பாக்ஸர் கலகத்தில் இந்த அகராதி வைத்திருந்த இடம் கலகக்காரர்களால் நிர்மூலமாக்கப்பட்டது. அப்பொழுது இவ்வகராதியின் அநேகம் புஸ்தகங்கள் எரிந்துபோயின. சிற்சில புஸ்தகங்கள்மட்டும் காப்பாற்றப்பட்டன.

உண்மையை யுரைத்தல்.

பரோடா தேசத்திலிருந்து வந்த மூடனை ஒருவனைப்பார்த்த தெக்ஷிண தேசத்தவன், "ஐயா, பரோடாவிலிருந்து வெளிவருகிறவர்கள் எல்லோரும் புத்திசாலிகளாய் இருப்பதின் காரணம் என்ன?" என்று கேட்டான். அதற்கு பரோடா தேசத்தவன் "நம் தேசத்திலிருந்து வெளிவரும் வழிகளிலெல்லாம் தகுந்த வித்வான்கள் இருக்கிறார்கள் அவர்களால் பரீக்ஷை செய்யப்பட்டு லாயக்கானவர்களே வெளியனுப்பப்படுவர்" என்று வெகு பெருமையாகக் கூறினன். இதைக் கேட்ட தெக்ஷிண தேசத்தவன், "அப்படியானுல், அப்பேர்ப்பட்ட பரீக்ஷகர்களிடம் அகப்படாமல் தாங்கள் தப்பிவந்தீர்கள் போலும்!" என்று சொன்னான்.

வாங்கமுடியாத வஸ்து.

சமீபத்தில் தனவந்தனுக ஒரு வியாபாரியினுடைய மூட மனைவி தன் பெண்படித்துவந்த பாடசாலைக்குச் சென்று குழந்தை படிப்பில் எப்படி என்று கேட்டாள். அதற்கு உபாத்தியாயனி, "குழந்தை மற்ற விஷயங்களிலெல்லாம் விலாக்யந்தான். சாதுர்யம் மட்டும் இல்லை, அது அவளுடைய தப்பிதமன்று." என்று சொன்னாள்.

"இந்த விஷயத்திற்கு அவளை கோபிக்க வில்லை. உங்களையே கோபிக்கவேணும். இதை முன்னலே சொல்லியிருக்கக் கூடாதோ? என்னவிலையாக இருந்தாலும் அவள் அப்பா அந்த சாதுர்யத்தை வாங்கிக்கொடுக்க மாட்டாரோ?" என்றாள். அவளுடைய புத்திசாலித்தனத்திற்கு உபாத்தியாயினி மூன்று நாள் நகைத்தாள்.

யுத்தக் குறிப்புகள்.

அமிழ்ந்த பிரிட்டிஷ் கப்பல்

"பெல்லி ஆப் பிரான்ஸ்" என்னும் பிரிட்டிஷ் கப்பல் அமிழ்த்தப்பட்டதாக ராய்ட்டர் அறிவிக்கிறது.

வெடிகுண்டுக் கூடைகள்.

இராணுவத்தில் கூடை முடியும் தொழிலாளிகள் நாளொன்றிற்கு 10, அல்லது, 11 மணி நேரம் வெடிகுண்டுக் கூடைகள் முடைவதில் வாரம் 6 பவுன் சம்பாதிக்கிறார்கள்.

கடலு ளமிழ்ந்த ஸெப்பலின்.

கடற்படையைச் சேர்ந்த இரண்டு கப்பல்கள் முற்றும் தேடியும் உடைந்த ஸெப்பலின் அகப்படவில்லை. அது அமிழ்ந்துவிட்டதாகக் கருதப்படுகிறது. கடலின் கொந்தளிப்பும் காற்றின் வேகமும் அதிகரித்திருந்தன.

கட்டாய ஊழியச்சட்டம்.

சமீபத்தில் மசோதாவாக இருந்த கட்டாய ஊழிய மசோதா இந்த பிப்ரவரிமீ 10உ முதல் அமுலுக்கு வந்த காரணமாக வருகிற மார்ச்சுமீ 2உ முதல் இங்கிலாந்தில் மனிதர்கள் இராணுவத்தில் சேர்க்கப்படுவோர் என்று ஸிவில் மிலிட்டரி தந்தி கூறுகிறது.

உற்சாக வார்த்தைகள்.

'கடமை, நம்பிக்கை; பொறுமை முதலிய மூன்று வார்த்தைகள் உங்களுக்கு புது வருஷத்திய ஞாபகார்த்தமாக இருக்கவேண்டும்' என்று லார்ட் கர்ஸான் பிரிம் ரோம்ஸ் சங்கத்தாருக்குப் புது வருஷத்திய தந்தி கொடுத்திருக்கிறார்.

இதற்குமா தண்டனை?

ஆங்கிலக் கைதிக்கு, சிகரெட், வர்த்தமானப்பத்திரிகை உடுத்திக்கொள்ளும் ஓர் உடை முதலியவைகள் பிராங்போர்ட்டின் சமீபத்தில் கொடுத்ததற்காக ஒரு பெண்பிள்ளை ஒரு மாத காவல்தண்டனை பெற்றாள். என்னே ஜெர்மனியரின் ஜீவகாருண்யம்!

கால்வாய் தாக்கப்படுமாம்.

ஜனவரி மாதக்கடைசியில் துருக்கியர் ஜெர்மன் உத்யோகஸ்தர்களால் நடத்தப்பட்டு ஸூயஸ் கால்வாயைத் தாக்குவார்களென்று என்வர்பாஷாவின் சகோதரரும், துருக்கி யுத்தமந்திரியுமாகிய மௌசிபே, கூறுவதாக "டெய்லி மெயில்" பத்திரிகை அறிவிக்கிறது.

பேர்டிஞண்ட் அரசரின் உத்திரவு.

பேர்டிஞண்ட் அரசரின் உத்திரவுப்படி பர்லினிலுள்ள பல்கேரிய இராணுவ அத்யக்ஷர் ஒருவர் சேனுபதி வான் ஹெண்டன் பர்கின் உருவச்சிலையில் ஆணி ஒன்று 5 பவுன் பெறுமானமுள்ள 50 ஆணிகளை அடித்திருக்கிறார்.

பிரஞ்சுக்காரர் செய்யும் புதுமாதிரியான யுத்தம்

பிரஞ்சு உத்யோகஸ்தர்கள் இரசாயன சாஸ்திர முயற்சியால், ஜாப்ரே தளகர்த்தரின் உத்திரவுப்படிமேற்காங்கத்தின் பிரதான ஸ்தலங்களில் புதுமாதிரியாகப் போர்புரிகிறார்கள். இம்மாதிரியான யுத்தம் மாரிகாலம் கழிகிற வரையில் நடைபெறும்.

ஸ்பெயின் தேசம் தயாரிக்கிறது.

நான்கு குருஸர்களும் ஒரு டார்பிடோ படகும் அநேகம் நீர்மூழ்கிகளும் ஒரு பெரிய சாமான் கப்பலும், தனக்குத் தயார்செய்வதற்காக ஸ்பெயின் கவர்ன்மெண்டு, ஆர்ம்ஸ்ட்ராங் விக்கர்ஸ் கம்பெனிக்கு, ஆர்டர் கொடுப்பதாய் கேப்பின் நகரிலிருந்துவந்த தந்தி அறிவிக்கிறது.

பெல்ஜியத்தில் துருக்கியர்.

துருக்கி பாஷையைத் தவிர வேறு பாஷைகள் ஒன்றும் தெரியாதவர்களாகிய 30,000 துருக்கியத் துருப்புகள் ஜெர்மன் உத்யோகஸ்தர்களால் நடத்தப்பட்டு பெல்ஜியம் வந்து சேர்ந்திருப்பதாயும்; அவர்கள் "பெஸ்" குல்லாவுடன் விளங்குகிறார்கள் என்பதாயும், "எக்கோபெல்ஜ்" என்னும் பத்திரிகை கூறுகிறது.

போர்முனைக்கு அனுப்பப்பட்ட ஜெர்மனியர்.

சமீபத்தில் ஜெர்மனியைச் சேர்ந்த பிராங்போர்ட்டிலே நாடகம் பார்த்து வெளியில்வந்த கூட்டத்தைப் போலீஸார் நிறுத்தினர். பிறகு 17 வயது முதல் 45 வயது வரையிலுமுள்ளவர்களை அவர்கள் அரெஸ்ட் செய்தனர். இவர்கள் [illegible]லிருந்து ஓடிவிட்டவர்களாகக் கருதப்பட்[illegible]மையால் மறுபடியும் போர் முனைக்கே [illegible]ப்பப்பட்டனர்.

[illegible]ருமேனிய தானியம்.

[illegible]யாவிலிருந்து 50,000 ரயில்வே ட்ரக்[illegible] தானியம் ஜெர்மனிக்கு அனுப்புவ[illegible] நிச்சயமாயிருப்பதாயும், அந்த தான[illegible] விலை ருமேனியா எல்லையில் வே[illegible]பட வேண்டுமென்றும், தாங்கிக் கொண்[illegible] கூலி பர்லின் பாங்கில் தங்க நாண[illegible]களாகக் கொடுபட வேண்டுமென்றும் ரு[illegible]ய வரவு செலவு மந்திரியார் கூறுவதா[illegible]பர்லின் 'வார்வார்ட்ஸ்' என்னும்பத்திரி[illegible] கூறுகிறது.

இந்திய வர்த்தமானம்.

தேசபாஷையின் மூலியமாகக் கல்வி கற்றுக் கொடுத்தல்.

சமீபத்தில் கூடிய சென்னை சட்டசபையில் பேசப்பட்ட விஷயங்களைக் கவனித்தால் படித்த இந்தியர்களுடைய அபிப்பிராயம், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு தேசபாஷைகளின் மூலமாகவே கல்வி கற்றுக்கொடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று தெரியவருவதாயும் இதற்கு எதிரில் நிற்பவர்கள் கல்வி இலாகாவிலுள்ள சில ஐரோப்பியர்களும் ஒரு சில இந்தியர்களுமே ஆவர்.

ஜாமீன் விடுதலை.

இராமநாதபுரம் ஜில்லா அருப்புக்கோட்டை தாலுகா மாஜி போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் மிஸ்டர் R. சேஷய்யங்கார் இராமநாதபுரம் செஷன்ஸ் ஜட்ஜியால் மூன்றுமாத காவல்தண்டனை பெற்றதாக எழுதியிருந்தோம். இப்பொழுது அவர் சென்னை ஹைகோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார். அவர் தன்னுடைய ஜாமீன் 1000 ரூபாயின் பேரிலும், மற்ற இருவர் ஜாமீன் பேரிலும் விடுபட்டிருக்கிறார்.

யுவான்ஷிகே சக்கிரவர்த்தி நாணயங்கள்.

யுவான்ஷிகே சக்ரவர்த்தியென்று முத்திரைபோட்ட ஒரு பவுன் பொறுமானமுள்ள தங்க நாணயங்களை சீனு கவர்ன்மெண்டு ஏற்கனவே போட்டிருப்பதாகவும் அதிலுள்ள அரச உருவம் சாதாரண சட்டைபோட்டுக் கொண்டு தலையில் தொப்பியில்லாமலும் மயிரை ஜெர்மனியர்களைப்போல் கத்தரித்துவிட்டுக்கொண்டும் இருப்பதாகவும் இம்மாதிரியான நாணயங்கள் அநேகம், பாங்குகளில் காணப்படலாமென்பதையும் பயோனீர் பத்திரிகையின் பம்பாய் நிருபர் வரைகிறார்.

நமது இராஜப்பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ்சு

வருகிற ஏப்ரல்மீ 2உ யன்று லார்ட் ஹார்டிஞ்சு பம்பாய்க்குச் செல்லுவார். அன்றையதினமே கப்பலும் ஏறுகிறார். இவரை இவருடைய ஜென்ம தேசம் போகும்பொழுது உபசரிக்க வேண்டுமென்று எண்ணியிருந்தவர்கள் பலர் ஏமாறும்படியாயது. அவருக்குக் கொடுக்கப்படும் உபசாரப் பத்திரங்களை யெல்லாம் ஒரேசமயத்தில் அநேகமாய் பம்பாய் டவுன் ஹாலில் பெறுவர் என்று தெரிகிறது. இனி வரும் இராஜப்பிரதிநிதியாகிய லார்ட் செம்ஸ் போர்ட் மார்ச்சுமீ 31உ பம்பாய்க்கு வந்து சேருவார்.

கள்ளிக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள்.

பொன்னானி தாலூகா ஆசிரியர் அம்ஷத்து இரண்டு மாப்பிள்ளைகள் பாம்புவெட்டும்போது தாம்பிரத்தோண்டி ஒன்று அகப்பட்டதென்றும், அதற்குள் பொம்மையின் முத்திரையுடன் கூடிய அநேக தாம்பிர நாணயங்கள் இருந்தன என்றும் அவை சரித்திர ஆராய்ச்சியுடையயோர்க்கு மிகுதியும் பயன்படும் என்றும் அந்த நாணயங்கள் கலெக்டரால் சென்னை கவர்ன்மெண்டு கண்காக்ஷிசாலைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனவென்றும் அவை தாமிரையன் அரசர்காலையில் செலாமணி ஆகிவந்தவை என்றும் கள்ளிக்கோட்டை நிருபர் சென்னை ஹிந்துபத்திரிகைக்கு எழுதுகிறார்.

பிளேக்நோயால் மரணம்

சென்ற ஜனவரிமீ 29உ யோடு முடிவான ஒரு வாரத்தில் இந்தியாவில் பிளேக் நோயால் இறந்தவர் 6620. விபரம் பின்வருமாறு.

மாகாணங்கள்	இறந்தவர்
பம்பாய் இராஜதானியும் ஸிந்துவும்	1772
சென்னை இராஜதானி	366
பேஹாரும் ஒரிஸாவும்	532
ஐக்கிய மாகாணங்கள்	1239
பஞ்சாப்	40
பர்மா	347
மத்திய மாகாணங்கள்	778
மைசூர் இராஜ்யம்	130
ஐதராபாத் இராஜ்யம்	1271
மத்திய இந்தியா	81
காஷ்மீர்	14

காசியில் மிஸ்டர் காந்தியின் பிரசங்கம்.

சென்ற 6-ந்தேதி மிஸ்டர் காந்தியால் மாணவர்கட்கு ஓர் உபந்யாசம் செய்யப்பட்டது. அச்சமயம் அவர் இராஜத் துரோகத்தையும், கொலைகளையும், கண்டித்துப் பேசிய தோடு இராஜப்பிரதிநிதியவர்களைக் காப்பதின் நிமித்தம் செய்திருந்த ஏற்பாட்டையும் கூறினர். அதன் மத்தியில் அவர் கூறப்போகும் விஷயத்தைச் சிலர் கேட்டார்கள். அவர் கூறிய குறிப்பே நீண்டதாக இருந்தமையால் பண்டிட் மதன் மோஹன மாளவையா தவறுதலான வழியில் செல்லும் சில யுவர்களின் கெட்ட நடத்தையை எடுத்து விஸ்தரிக்கப் போகிறார் என்பதையும், மிஸ்டர் காந்தி உபந்யசிக்கப் போகிறார் என்பதைக் கூறியும் அநேக சுதேச இராஜாக்கள் எழுந்து போயினர். கஷ்டப்படும் இந்தியர்களின் நிமித்தம் தன் குடும்பத்தோடு தானும் அநேக கஷ்டங்களை கேடாலில் யனுபவித்தவரும், இந்தியாவின்நிமித்தம் இன்னமும் பாடுபட்டு வருவோருமாகிய இவர் பேசிய விஷயமானது இந்திய அரசர்களை எழுந்துபோகும்படி செய்தது ஆச்சரியமாகயிருக்கிறது.

நிருபர் கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

கடம்பூர் சத்ஜன சபை வருஷப்பூர்த்தி.

ச. மு. முத்துக்கருப்பஞ்செருவைகாரரவர்களா லேற்படுத்தப்பெற்ற இச்சபையின் நாலாவதாண்டு நிறைவுவிழா சென்ற தைமீ 17உ பாடசாலையின் முன் அமைத்திருந்த கொட்டகையில் தச்சநல்லூர் ஸ்ரீமான் இலக்குமணப் போற்றிகள் அக்கிராசனத்தின்மேல் நடைபெற்றது. அறிஞர் பலர் விஜயஞ் செய்திருந்தார்கள். தமிழ் வேத பாராயணம் நடைபெற்றது. தலைவரவர்கள் நன்னயமாக முன்னுரை மொழிந்தார்கள். பின்னர் ஸ்ரீமான் கருப்பய்யா பாகவதரவர்களால் "அன்பு" என்ற விஷயமும், ஸ்ரீமான் சுப. ராம. மீ. கந்தசாமிசெட்டியாரவர்களால் "சாதனசதுஷ்டயம்" யென்னும் விஷயமும், பிரம்மஸ்ரீ பஞ்சாபிகேசப்பாவர்களால் "தவம்" என்னும் விஷயமும் ஓட்டநத்தம் ஸ்ரீ ஜெகவீரபாண்டியனவர்களால் "கல்வி" யென்னும் விஷயமும் செவ்வையாக உபந்யாசிக்கப்பெற்றன. தலைவரவர்கள் நடைபெற்றவற்றுள் கண்ட நயங்களைத் திரட்டிக்கூறி சபையோரை மகிழ்வித்தார்கள். மறுநாள் "செய்நன்றியறிதல்" என்னும் விஷயத்தைப்பற்றி ஸ்ரீமான் கருப்பய்யாப்பாவலரவர்களும் "விருந்தோம்பல்" என்னும் விஷயத்தைப்பற்றி ஸ்ரீமான் சுப. ராம. கந்தசாமிச்செட்டியாரவர்களும், "சன்மார்க்கம்" என்னும் விஷயத்தைப்பற்றியும் ஸ்ரீமான் ஜெகவீரபாண்டியனவர்களும் மிக அழகாகப் பிரசங்கித்தார்கள். இவற்றுள்கண்ட சாரங்களை தலைவரவர்கள் எடுத்துவிளக்கி இனிசமபெற முடிந்த பின்னர் ஹாரதாம்பூலாதிகள் வழங்கப்பெற்றன.

ச. பே. உலகநாதன்.

கமுதி. (1—2—16)

திவான் அவர்கள் விஜயம்:—இராமநாதபுரம்ஜில்லாவுள்ளடங்கிய இராமநாதபுரம் சமஸ்தானம் உதவி திவான் மிஸ்டர் T. N. சொக்கலிங்க முதலியார் B. A. அவர்கள் ஷெ சமஸ்தானம் கமுதி தாலூகா பரளைச்செய் கிராமத்திற்கு 29—1—16 மாலை சுமார் 5-மணிக்கு விஜயமாகி 30—1—16 மாலை 4-மணி சுமாருக்குச் செங்குளம் கிராமத்தின் கண்மாயைப் பார்வையிட்டுக்கொண்டு பரளைச்செய் பெரியகண்மாய்க்கு ஜலம் வரும் கஞ்சம்பட்டிக் கருகுள்ள ஓடையிலிருந்து தொடர்ந்துவருகிற பழைய கால்வாயைப் பார்க்கப் புறப்பட்டு ஷெ கால்வாயின் மேல்புறமுள்ள தொப்பலக்கரை பாதையை யடைந்தும் இருட்டிவிட ஷெ கிராமம் உள்ளிட்ட வடக்கு நத்தக்காட்டிலமர்ந்திருந்து 31—1—16 மாலை சுமார் 4-மணிக்கு ஷெ கால்வாயின் மீதத்தையும் அதற்குரிய தத்துக் கலுங்கையும் கண்ணுற்று இந்த கால்வாயின் கரைகளைப் பூரா மராமத்து செய்வது முக்கியமென்றும் கூறினார்கள். அவ்வாறு முடிவடைந்தால் பரளைச்செய் டிவிஷன் கிராமங்களன்றி மற்ற கிராமங்களும் க்ஷாமநிலையினின்று நீங்குமென்பது திண்ணம் இப்பரளைச்செய் பெரியகண்மாய்க்குமட்டும் சுமார் 650 கல விரைபடி நன்செய் நிலங்கள் சாகுபடியாகி வந்திருக்கிறது. தண்ணீர் தட்டால் சாவியாகிப் போகிறது.

முனையடுவார் திருமடம்:—அருப்புக்கோட்டைத் தாலூகா பரளைச்செய் கோட்டையூரில் வெகுகாலத்துக்குமுன் முதல் கூரைக்கட்டிடமாக இருந்துவந்த முனையடுவார் நாயனார் குருபூஜைமடத்தைக் கெட்டிக்கட்டிடமாகக் கட்டவேண்டியதற்காக ஷெ கிராமக் கர்ணம் மு. திருமலைழகுபிள்ளையவர்கள் முயற்சித்து வருகிறார். இம்மடத்திற்குக் கீழ்ப்புறம் சாமிபிள்ளை பெண்சாதி ராக்கம்மாளால் ஷெ மடத்திற்கு உபயமாக விடப்பட்ட கட்டிடத்தில் நெடுமாறநாயனார் புத்தகசாலை இருந்துவருகிறது. இம்மடாலயம் இக்கிராமத்தில் கட்டி முடிந்தால் இக்கிராமம் பெரும்பேறுடைய பெருமையை யுடைத்தாகுமாகையால் இம்முயற்சியைக் கைசோரவிடாது முடிப்பவர்கள் இன்றியமையாத நன்மையைப் பெறுவார்களென்பது நாம் சொல்லாமலே யாவர்க்கும் விளங்கும்.

மாட்டுமேய்ந்தைக் கிணறு:—அருப்புக்கோட்டைத் தாலூகா பரளைச்செய் கிராமத்திற்கு வடபுறத்திலிருக்கிற திருச்செல்வேலிமுதலிய இடங்களுக்குப்போகிற மகம்மாள்சாலையை அடுத்துள்ளதும் மாட்டுமந்தை நிலத்துக் கடுத்துள்ளதுமாயிருக்கிற குமுத்தக்கல் பழுதற்ற மாட்டுமந்தைகிணற்றைச் சென்ற சில மாதங்களாக சக்கிலியர்கள் ரிப்பேர்செய்து ஷெ குமுதக்கல் லொன்றில் எழுத்துக்களால் சக்கிலியர்க்குச் சொந்தமென வரைந்துமிருக்கிறார்கள். இதுவோ பாண்டியராஜா காலையில் கட்டப்பட்ட கிணறு. இத்தகையதை புறமத பிரவேசத்தால் ஷெ சக்கிலியர்கள் பிறவேசித்திருக்கிறார்கள் போலும்.

நன்குசெயமுயல்வோன்.

மிஸ்டர் M. சின்னையா செட்டியாரவர்கள் பினங்கிற்செய்த பிரசங்கத்தின் சாரம்.

சௌ தைமீ 8உ வெள்ளிக்கிழமை பிற்பகலில் பினங்கு நகரத்தார்களின் விருப்பத்தின்படி மகிபாலன்பட்டி M. சின்னையா செட்டியாரவர்கள் செய்த நீண்ட பிரசங்கத்தின் சாரங்களை மட்டும் இங்கு எழுதுகிறோம்.

முதன்முதலிற் பினங்கு நகரத்தாரின் ஒற்றுமையும் கட்டுப்பாடும் அவர்கள் எம்பெருமானது கைங்கர்யத்திற் காட்டும் சிரத்தையும் மிகவும் பாராட்டத்தக்கன வென்று கூறினார்கள்; பிறகு ஷண்முகப் பெருமானது பெருமையைப் பற்றிச் சிறிது கூறிவிட்டு, நாட்டுக்கோட்டையார்களின் பொதுவான சில நன்மைகளைப் பற்றியும் சுகாதார முறைகளைப் பற்றியும் மிக அழகாகப் பேசினார்கள். கடைகளுக்கு மேலாட்களாக அனுப்பப்படுகிறவர்கள் கிரம்ப சிறுபிராயமுள்ளவர்களாக இருக்கக்கூடாதென்றும் விவாகமாகி குடும்ப பாரத்தை யேற்றவர்களாகவே இருக்கவேண்டுமென்றும் கூறினார்கள். வியாபார ஸ்தலங்களில் ஒரே வீட்டிற் பலர் சேர்ந்து வசித்து உண்ணுவதும் உறங்குவதும் வியாபாரம் நடத்துவதும் வைத்துக்கொள்வது சுகாதார விதிகட்கு முற்றிலும் விரோதமானவை யென்றும், வியாபாரம் நடக்கிற இடம் வேறாகவும் உண்ணுதற்கும் உறங்குதற்கும் வேறிடமாகவும் பிரிக்கப்பட்டு சரீர சௌக்கியத்தைப் பேணிக்கொள்வ தவசியமென்றும், அதனால் வருகிற கொஞ்சம் அதிகச்செலவு ஒரு பெரிய காரியமாகாதென்றும், அதைப் பினங்கு நகரத்தார் உடனே கவனிப்பார்களென்று தாம் நம்புவதாகவும் கூறினார்கள். அப்போது யாவரும் கரகோஷம் செய்தார்கள். சரீர சௌக்கியத்துக் குற்றவழிகளிலெல்லாம் செட்டுச்செய்து செலவைச் சுருக்கி மிக்க பிரயாசையோடு பொருளீட்டி, அப்பொருளை அனுபவியாமல் பெரிய செலவாக அனாவசியமாகச் செலவிட்டு நம்மவர் கஷ்டமடைவதைப் பற்றி மிகவும் வருத்தமாகப் பேசினார்கள். அத்தகைய வீண் செலவுகளைக் குறைக்கும் வழிகளைப் பற்றி மிக விளக்கமாகப் பேசி அதற்குற்ற சௌகரியங்களெல்லாம் நமது சமூகத்துக்கு நன்கமைந்திருக்கின்றன வென்றும் எடுத்துக்காட்டினார்கள்.

கல்வி கற்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும், கல்வியின் பெருமையைப் பற்றியும், அவர்கள் கூறியது ஒவ்வொருவர் மனத்திலும் நன்றாய்ப் பதியக்கூடியதாக இருந்தது. கல்வியின் பாகுபாடுகளையும் கற்கவேண்டிய வழிகளையும் தனித்தனியே மிக அழகாக எடுத்துக்கூறினார்கள் சபையிற் கூடியிருந்த சுமார் 500, 600 ஜனங்களும் மிகக் கவனமாகவும் யாதொரு சந்தடியில்லாமலும் அன்போடு கேட்டு ஆனந்தித்தார்கள்.

முடிவில் மிஸ்டர் தி. சொ. சிதம்பரஞ் செட்டியாரவர்கள் பிரசங்கத்தைப் புகழ்ந்து கூறி ஆசிர்வதித்து பாலைசாந்தினார்கள் நகரத்தார் நீண்ட கரகோஷஞ் செய்தார்கள் மங்களமாக நிறைவேறியது ஸ்ரீமான் சின்னையா செட்டியாரவர்கள் இன்னும் பல பிரசங்கங்களை செய்து நமது சமூகத்துக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்வார்களென்று பிரார்த்திக்கிறோம்.

நகரவைசியர்.
பினங்கு.

வைசியமித்திரன்

1916-பிப்ரவரி௴ 14௳ திங்கட்கிழமை.

ஹிந்து யூனிவர்ஸிடி.

மனிதர்களுடைய காரியங்களிலும் அவர்களுடைய முயற்சியிலும் உதவிபுரியும் ஈசன் ஒருவர் இருக்கிறார் என்பதை ஹிந்து யூனிவர்ஸிடி நிரூபிக்கின்றது. சுமார் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் ஹிந்து யூனிவர்ஸிடி என்னும் எண்ணமானது ஒருசில இந்தியப் பிரமுகர்களுடைய கவனத்தில் மட்டும் இருக்கவந்தது. பிறகு அது வெளியில் பிரஸ்தாபிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்டவுடன் அதற்கு ஏற்பட்ட விக்கினங்கள் எண்ணிறந்தன. ஆயினும் இறைவன் அருளால் ஹிந்து யூனிவர்ஸிடி மசோதா சென்ற அக்டோபர் மாதம் எவ்விதமான வாதங்களுமில்லாமலே சட்டமாக்கப்பட்டது. அது நாளுக்கு நாள் விர்த்தியாம்சம் பெறுவதைப் பார்க்கிற இந்தியர்களாகிய நம்முடைய சந்தோஷத்திற்கு அளவில்லை என்றே சொல்லவேண்டும். இப்பொழுது இம்மாதம் 4௳ யன்று ஹிந்து யூனிவர்ஸிடியின் கட்டிட அஸ்திவாரக்கால் நமது இராஜப்பிரதிநிதி லார்ட்ஹார்டிஞ்ச் பிரபுவினால் அதிக ஆரவாரத்துடனும் மிக்க விமரிசையுடனும் காசியில் நாட்டப்பட்டும் போயது. இதிலிருந்து இந்தியர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவெனின் விடாமுயற்சியுடன்கூடியவர் சேர்ந்து உழைத்தால் எக்காரியத்தையும் சாதித்துவிடலாம் என்பதுதான்.

இப்பொழுது இந்தியாவில் நிலைபெற்றிருந்து வரும் எந்த யூனிவர்ஸிடியினிடத்திலும் சேர்ந்திராத இரண்டு விசேஷ குணங்கள் இந்த யூனிவர்ஸிடிக்குச் சேர்ந்திருக்கின்றன வென்னலாம். முதலாவதாக இந்த யூனிவர்ஸிடி ஸபை பரீக்ஷா சபையாக மாத்திரம் இல்லாமல் போதனா ஸபையாகவும் இருக்கும். இரண்டாவதாக, அது மத விஷயத்தில் வழிகாட்டும் ஸபையாகவும் இருக்கும். முதலாவதாகக் குறிக்கப்பட்டுள்ள விஷயத்தைப்பற்றி இராஜப்பிரதிநிதியவர்கள் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

"உயர்தரக் கல்வி விஷயமாகச் சில சௌகரியங்களைச் செய்வதை விட மேலான காரியங்களை இந்த யூனிவர்ஸிடி நடத்தப்போகிறது. இதர வித்யாசாலைகளைச் சேர்த்துப் பரீக்ஷை செய்யும் குணத்தைப் பொருந்தியதாயிராமல் இக்கலாசாலையானது பரீக்ஷை செய்வதுடன் போதிக்கும் தொழிலையும் மேற்கொண்டதாயிருப்பதால், இந்தியாவுக்கே இதன் ஸ்தாபனம் நூதனமானதாகும். இக்கொள்கைகள் ஏற்கனவே மிகுந்த புத்திமான்களால் பொதுவாக அங்கீகரிக்கப்பெற்றிருக்கின்றன வென்பதை நான் அறியாதிருக்கவில்லை; ஆனால் நமது பழைய கலாசாலைகள் ஏற்பட்டகாலத்தில் இக்கொள்கைகளின் அவசியம் நன்கு உணரப்பெறாததால் அவைகளின் தன்மையில் இக்கொள்கைகளில் ஒரு சிறு பகுதியே சேர்க்கப்படக் கூடியதாயிருக்கும். இக்கொள்கைகள் இந்தியாவுக்கே நூதனமானவைகளென நான் கூறியதில் ஒருக்கால் தவறிருந்தாலும் இருக்கலாம்; ஏனெனில் தற்காலத்திய சர்வகலாசாலைகளை எவ்விதத்திலும் ஒத்ததாய் பூர்வகாலத்தில் யாதொன்றும் இல்லையானாலும், அதனை யொத்த சர்வகலாசாலை கிறிஸ்து பூர்வீகமாகிய காலத்தில் இருந்திருப்பதாக நமது அறிவுக்கெட்டுகின்றது வஸிஷ்டரையும் காமா (?கௌதமா) வையும் போன்ற சிறந்த குருமார்களைச் சூழ ஆயிரக்கணக்கான மாணவர்கள் சூழ்ந்திருந்ததாகப் பழைய சரித்திரங்களினால் அறிகிறோம். உண்மையாகவே, கல்வியைப்பற்றிய வரையில் இந்தியர்களின் கருத்தானது சிஷ்யக்கூட்டங்கள் விஸ்வாசத்தோடு கூடிய மரியாதையுடன் தமது குருமார்களைச் சூழ்ந்திருந்துகொண்டு அவர் திருவாக்கினின்றும் வெளிவரும் ஞானமொழிகளைக் கேட்டு மதவிஷய பக்தியிலும் ஆசார ஒழுக்கங்களிலும் அவரது போதனைகளையும் நடத்தையையும் பின்பற்றி நடப்பதென்பதாகவே இருந்து வந்திருக்கின்றது."

இந்த கலாசாலையின் பெயர் ஹிந்து யூனிவர்ஸிடி என்றிருந்தபோதிலும் இது ஸ்ரீகாசி யூனிவர்ஸிடி என்றே நம்மவர்களால் அழைக்கப்பெறும். இது ஹிந்து மத போதனையைப் பிரதானமாகக் கைக்கொண்டபோதிலும் ஏனைய மதச் சிறார்களுக்கும் பக்ஷபாதமின்றிப் போதனை செய்துவருமென்று இதன் ஸ்தாபித கர்த்தாக்கள் தெளிவாயுரைத்திருக்கின்றனர். ஸ்ரீகாசி க்ஷேத்திரமானது பண்டைக்காலந் தொட்டு நம்மவர்களால் பெரிதும் பாராட்டப்பெற்று வந்திருக்கின்றமையாலும் வடஇந்தியாவுக்கே நடுநாயகமாக விருப்பதாலும் இப்போதும் மத விஷயத்திலும் கல்வியிலும் முதிர்ந்த ஞானமுடையவர்களால் நிறைப்பெற்றிருப்பதாலும் எத்தலத்தைப் பார்க்கிலும் இத்தலமே நமது ஹிந்து யூனிவர்ஸிடிக்குத் தக்கதாமென்பது பிரசித்தம்.

இந்தப்புதிய யூனிவர்ஸிடிக்காக நமது தேசமன்னர்கள் பலரும் ஏனைய பிரபுக்களும் பெருந்தொகையான பணங்கள் நன்கொடையாக அளித்திருப்பதன்றி வருஷந்தோறும் சிலர் குறிப்பிட்ட தொகைகள் கொடுத்துவருவதாகவும் வாக்களித்திருக்கின்றனர். ஜோதிப்பூர் மகாராஜா அவர்கள் வருஷத்துக்கு 24,000 ரூபா கொடுத்துவருவதாகவும் அத்தொகையைக்கொண்டு கைத்தொழிற் கல்விப் போதனாமுறையை மாட்சிமைதங்கிய லார்டுஹார்டிஞ்ச் பேரால் ஏற்படுத்தும்படி செய்திருக்கிறார்கள். மைசூர் மகாராஜாவும் வருஷந்தோறும் இந்த யூனிவர்ஸிடிக்கு ரூபா 5000 கொடுத்துவருவார். இந்தியா கவர்ன்மெண்டாரும் வருஷத்தில் ஒருலக்ஷம் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். இதுவரையில் மூலதனத்துக்காகச் சேர்ந்திருக்கும் தொகை ஒரு கோடி ரூபாயாகுமெனச் சொல்லப்படுகின்றது. இப்போது பரோடா சமஸ்தானத்தின் கெய்க்வார் மகாராஜா அவர்கள் ஒரு லக்ஷம்ரூபா நன்கொடையளித்திருப்பதாகத்தெரிகிறது. ஆகலால் இந்த யூனிவர்ஸிடிக்குப் போதுமான ஐவேஜி ஏற்படுமென்றே நினைக்கலாம். நமது வைசிராயவர்கள் தேண்டபிரசங்கத்தில் குறிப்பிட்டபிரகாரமே பணத்தைவிட அதிக முக்கியமாகவேண்டியது தகுந்த பண்டிதர்களும் உபாத்தியாயர்களுமே யாதலால் இந்திய முழுவதும் ஆய்ந்தறிந்துள்ள வித்யா விற்பன்னர்களாகிய ஹிந்துக்கள் தங்கள் ஞானச்சுடரால் இந்த யூனிவர்ஸிடியைப் பிரகாசிக்கச்செய்யவேண்டியது அத்யாவசியமாகும்.

இனி இந்த யூனிவர்ஸிடி இந்தியாவில் உள்ள ஹிந்துக்களால் நடைபெறும் கலாசாலைகளையும் பள்ளிக்கூடங்களையும் சேர்த்துக்கொண்டு இப்போது கவர்ன்மெண்டாரது யூனிவர்ஸிடியார் செய்துவருவதுபோல் பரீக்ஷை செய்து பட்டங்களும் அளிப்பதற்கு ஏற்பாடு செய்யுமென நம்புகிறோம். இவ்வாறு நமது பாலியபாலிகைகளை சுயமதப் பற்றுள்ளவர்களாகவும் சுயதேச விஸ்வாசமுள்ளவர்களாலும் சன்மார்க்கமுள்ள இந்திய பிரமுகர்களாகவும் செய்வது இந்தப் புதிய யூனிவர்ஸிடியின் முதன்மையான கடமையாகும்.

புதுச்சேரி சுகாபிவிருத்தினிப் பத்ராதிபரின் அவசர அபிப்பிராயம்.

எக்காரியத்தைச் செய்தபோதிலும் நன்று செய்யவேண்டியது அத்யாவசியமாகலாலும், "செய்பவை செய்யாமையானும் கெடும்" என்னும் ஆசிரியரின் அமுதமொழியை அனுஷ்டிக்கவேண்டுவது மனிதர்களின் கடமையாகலாலும் இவ்விஷயத்தை விரிவாகவே கூறத்தொடங்குவதோடு சுகாபிவிருத்தினிப் பத்ராதிபரின் பெருந் தவறுதலை எடுத்துக்காட்டி விஷயத்தை அறிவுறுத்தவும் ஆரம்பிக்கிறோம்.

இவ்வருஷம் ஜனவரி மாதம் முதல் வாரத்தில், புதுச்சேரியிலிருந்து பிரசுரம் செய்யப்படும் "இந்தியன் அட்வர்டைஸர்" என்னும் மாத சஞ்சிகையின் 1915-ம் வருஷத்து நவம்பர் பிரதியொன்று நமக்கு அனுப்பப்பட்டது. அதில் ஆங்கிலத்திலே For favour of review and exchange (அபிப்பிராயத்திற்கும், பத்திரிகை மாற்றிக்கொள்வதற்கும்) என்று முதல் பக்கத்தில் வரையப்பட்டிருந்தது. அப்படியே 10-1-16ல் வெளியான நமது பத்திரிகையில் அதைப்பற்றி அபிப்பிராயம் கீழ்க்கண்டபடி வரைந்தோம்;

"இந்தியன் அட்வேர்டைஸர்:—இஃது ஒரு மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை. இதன் 1915ஞு நவம்பர் சஞ்சிகை யொன்று வரப்பெற்றோம். இதில் வேதாந்த விஷயங்களும், வேடிக்கையான விஷயங்களும், கவிகைகளும் வெளிவருகின்றன. இதில் பத்ராதிபரின் அபிப்பிராயங்கள் பொது விஷயம் ஒன்றும், இராஜீய சம்பந்தமான ஒன்றல்லது இரண்டு வியாசங்களும் வரின், மிகுதியும் கொண்டாடப்பட்டு பொதுஜனங்களால் ஆதரிக்கப்படும் என்பது நிச்சயம். இதன் வருஷ சந்தா ரூபாய் 2—8—0 இதைப் பெற விரும்புவோர் மானேஜர், இந்தியன் அட்வர்டைஸர், புதுச்சேரி என்ற விலாசத்திற்கு எழுதவேண்டும்."

பின்னர் நமது பத்திரிகையைப்பற்றி புதுவை இந்தியன் அட்வர்டைஸர்—நாம் வேண்டவில்லையாயினும்—தனது மேன்மையான அபிப்பிராயத்தை டிஸம்பர் சஞ்சிகையில் கொடுத்திருக்கிறது—அதைப்பற்றி நாமொன்றும் மனத்தாங்கல் கொள்ளவில்லை.

இந்த நிலையில் புதுச்சேரியிலிருந்து 1-2-16ல் வெளிவந்த "சுகாபிவிருத்தினி" என்னும் பத்திரிகையில் மேற்கூறப்பட்டுள்ள அவ்விஷயத்தையும் அறியாமலே அதன் பத்ராதிபர் வசனசாதுர்யங்காட்டி, கீழ்க்கண்டபடி எழுதுகிறார்

வைசியமித்திரனும் இந்தியன் அட்வர்டைஸரும்:—தேவகோட்டை ஸ்ரீமான் வைசியமித்திரன் பத்ராதிபர் அவர்கள் நவம்பர் ௴ வெளிவந்த புதுவை இந்தியன் அட்வர்டைஸர் சஞ்சிகையைக்கண்டு அதில் பத்ராதிபர் அபிப்பிராயமின்மையால் பிற எழுதியுள்ள விஷயங்களுடன் பத்ராதிபராகிய இவரது அபிப்பிராயத்தொடு பொதுவிஷய வியாஸங்கள் ஒன்றிரண்டு வரின் நன்றென்றறிவுறுத்தி யுள்ளவர் டிஸம்பர் ௴ வெளிவந்த அச்சஞ்சிகையில் பரிவர்த்தனையாக வந்துகொண்டிருக்கும் பத்திரிகைகளை மேற்படி பத்ராதிபர் நன்கு விமர்சித்தவர்போல் இப்போதுதான் புதிதாய் வருவதாயெண்ணிச் சில விடங்களில் பத்திரிகை வரவென்று முகவுரையிட்டுத் தூரியன் விடு திறையைக்காட்டிய அப்பண்டம்போல வெகு சாதுர்யமாயெழுதிய விஷயங்களால் சஞ்சிகையில் சிறப்புள்ளவையை மித்திரன் கண்டிருப்பாரேல் தம்மபிப்பிராயப்படியுள்ளதென்றிப்போ தொருவாறு சந்தோஷிப்பாரென் றெண்ணுகிறோம்.

"சுகாபிவிருத்தினி" என்பது சென்ற மூன்றரை வருஷ காலமாகப் பதினைந்து நாட்களுக்கொருமுறை டிம்மி ஆறு பக்கங்களுடன் வெளிவரும் ஒரு பத்திரிகையாகும். அப்பத்திரிகை புதுவையிலிருந்தே வெளியிடப்படுகின்றமையின், தாம் எழுதப்போகும் விஷயவிபரத்தை இந்தியன் அட்வர்டைஸரின் பத்ராதிபரிடம் சென்று தீர விசாரிக்கவேண்டிய பொறுப்பு தம்முடையதென்பதை அப்பத்ராதிபர் உணராமலே எழுதமுன்வந்தார் எப்பத்திரிகையிலும் பத்ராதிபரின் அபிப்பிராயமாக பொது விஷய வியாசங்கள் வரவேண்டியது அத்யாவசியம். இதை அப்பத்ராதிபர் அறிந்திருந்தால் [illegible] குறைகூற முன் வரமாட்டார். இவரிடம் அபிப்பிராயத்திற்காக வந்த பத்திரிகை [illegible] முன்னேற்றத்துக் கல்லவா? [illegible] "[illegible] கல்லது" என்று கூறிவிடவேண்டுமா!

ஆனால் அப்பத்ராதிபர், சென்ற ஜனவரி௴ 1௳ வெளியான சுகாபிவிருத்தினியில் சந்திரசேகரன் என்னும் புத்தகத்தைப்பற்றி "தற்கால நிலைமையைக் கருதி நமது தேசம் முன்னுக்கு வரும் வழியைத் தடுக்கும் கருவி நூல்களாயில்லாமல் காலத்தை வீணாகச் செலவு செய்யும்படியான இதுபோன்ற பல கதைப் புத்தகங்களை எழுதி வெளிப்படுத்துவதை வழக்கமாக வைத்திருக்கும் நம் சகோதரர்கள், பல ஜனங்களுக்கும் பயன்தரத்தக்க மார்க்கத்தில் இவ்வாறே தங்கள் கல்வியறிவையும் வாழ்நாள்களையும் செலவிட்டு வருவார்களானால் எவ்வளவோ புண்ணியமும் புகழும் உண்டாவதுடன் நம் தேசத்தில் பொருளும் விர்த்தியாகி க்ஷேமத்தைத்தரும் என்பதைக் கவனித்து முயல்வார்களென்று எண்ணுகின்றோம்." என்று எழுதிய அபிப்பிராயத்தை நாம் ஏற்கெனவே கொண்டாடினோம்.

நன்மைகடைப்பிடி என்ற முதுமொழியை அப்பத்ராதிபர் தமது பத்திரிகை மட்டில் நிறுத்திக்கொண்டு தம் அனுபவத்திற்குக் கொண்டு வராதிருத்தல்பெரும் வியப்பைக் கொடுக்கின்றது.

டிஸம்பர் மாதத்து இந்தியன் அட்வர்டைசர் பத்திரிகையில் வந்துள்ள பொதுவிஷயம் அவ்விஷயம் பொருத்த மட்டில் எமக்கு மனத்திருப்தியைக் கொடுக்கின்றது மேல்காட்டப்பட்ட காரணங்களால் "தூங்கி விழித்தது" பதினைந்து நாட்கட் கொருமுறை விழிக்கும் பத்ராதிபர் தாமே என்பதையும், "தூரியன் விடு திறையைக்காட்டிய அப்பண்டம்" போன்றது அவருடைய வசன சாதுர்யமே என்பதையும் தாமே உணர்வர். பிறர் மீது தோஷாரோபணம் கொடுக்கும் அப்பத்ராதிபர் தமது மேன்மையான நேரத்தைஇந்திய ஜனசமூகத்தின் முன்னேற்றத்தில் கழிப்பாராக; வீண் வாதங்களை ஒழிப்பாராக.

சந்தாதார்களுக்கு அறிவிப்பு.

நாளிது 1916-ம்ஞு ஜனுவரி௴ 30௳ முடிய பாக்கியுள்ள சந்தாத் தொகைக்கு அடுத்தவாரம் முதல் பத்திரிகை வி. பி. போஸ்டில் அனுப்பப்பெறுவருமாதலால் சந்தா நேயர்கள் தயவுசெய்து தவக்காமல் தொகையைச் செலுத்தி வி. பி. யைப் பெற்றுக்கொண்டு நமது மித்திரனை என்றென்றும் ஆதரித்துவருமாறு கோருகிறோம்

மானேஜர்.

உள்ளூர் வர்த்தமானம்.

பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம்:—இந்நகர் வடபாலுள்ள சத்திரம் புதூர் நடாத்தின் கீழ்க்கரையில் மெ. வகையறு குடும்பஸ்தர்களுக்குச் சொந்தமான விநாயகர் ஆலயம் மிகப் பழையதாயிருந்தமையால் அதனை ஸ்ரீமான். ராம. மெ சித. வைரவன் செட்டியாரவர்களால் சொந்தச் செலவில் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பெற்று 7—2—16 பகல் 1-மணிக்கு மேல் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. ரூபாய் 3000 செலவானதாகத் தெரிகிறது.

பெண்பாடசாலை:—வைசியமித்திரன் பெண்பாடசாலைக்கு- தர்மவித்தியா ஞானோதயசங்கத்தின் கமிட்டி மெம்பர் ஸ்ரீமான் அரு. லெ நா லெ. நாராயணன்செட்டியாரவர்களும் மதுரை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் தேவஸ்தானம் கமிட்டி மெம்பர் ஸ்ரீமான் அ. இராமநாதன் செட்டியாரவர்களும் ஸ்ரீமான் அரு அரு சோம. அருணாசலம் செட்டியாரவர்களும் இன்னும் சில கனவான்களும் விஜயம்செய்து பாடல் படிப்பு எழுத்து முதலியதுகளை பரீக்ஷித்து மாணவிகளுக்கு எழுதும் கருவிகளும் தின்பண்டங்களும் அளித்தனர்.

திருட்டு:—7௳ இரவு கல்லுப்பட்டியார் வீதியில் மெய்யப்பசெட்டியார் வீட்டில் அவ்வீட்டிலுள்ள சிலர் முகப்பில் நித்திரைசெய்துகொண்டிருக்கும் சமயம் மூன்று திருடர்கள் சுவர் ஏறி உள்ளே பிரவேசித்து ஒரு செட்டியார் கழுத்தில் அணிந்திருந்த பொற்சாட்டை ஒருவன் பிடித்திழுக்கையில் அவர் எழுந்திருந்து சாட்டை விடாமல் பிடித்துக்கொண்டார். அந்த சாடு அறுந்து செட்டியார் கையில் தங்கவே அதனை காலையில் எடுத்துக் கொள்ளலாமென்ற எண்ணங்கொண்டு கம்பவுண்டுக்குள் எறிந்துவிட்டார் மற்ற இரண்டு திருடர்களும் விளக்கை அணைக்க முயன்றார்கள். ஆனால் அத்தீபம் அணையவில்லை திருடர்களில் இருவரை செட்டியார் நன்கு தெரிந்துகொண்டார் என்று தெரிகிறது.

கும்பாபிஷேகம்:—சிவன்கோயில் அஷ்டபந்தன கும்பாபிஷேகத்திற்கு கோயிலின் வடபுறத்தில் யாகசாலைக் கொட்டகைகள் நாகரீகமான சிங்கார மாளிகைகளைப்போல் அமைக்கப்பட்டு வாழை, கமுகு முதலிய விருக்ஷங்களாலும் காய், கனி, புஷ்பம் முதலியவைகளாலும் அலங்கரிக்கப்பட்டுச்சுற்றிலும் அக்ஷரவடிவங்களாக நெல்நாற்றுவளர்த்தும்,நேத்திரானந்தம் அடையும்படி பிரகாசித்தன. 4-2-1916 வெள்ளிக்கிழமை இரவு கடங்கள் ஸ்தாபனம் செய்யப்பட்டன. வைதீகச் சடங்குகள் யாவும் வேதாகமங்களில் தேர்ச்சிபெற்ற பிற ஊர் சிவத்வஜர்களால் வழுவின்றி நடந்தேறின யாகசாலையின் நாற்புறங்களிலும் சுற்றிலும் நான்கு வேதபாராயணக் கோஷ்டிகளும் ஸ்கந்தபுராணம், திருவிளையாடற்புராணம்முதலிய படனங்களும் இன்னிசைக்கருவிகளுடன் தமிழ்வேதமும் பஜனைக்கோஷ்டிகளும் அருள் பெருகும்படி இராப்பகலும் கோஷித்துக்கொண்டிருந்தன. சோடசோபசாரச் சிறப்புகள் கண்டு தெரிசிக்க ஒவ்வொரு பூஜா காலங்களிலும் திரளான ஜனங்கள் கூடியிருந்தனர்.

7—2—1916 திங்கட்கிழமை காலையில், சுவாமி கோயில் வடக்குப் பிரகாரத்தில் அறுபத்துமூன்று அடியார்கள் முதலியோரின் பிரதிஷ்டையும், அம்மன் சந்நிதி கோபுரவாயிலில் விநாயகர், பாலசுப்பிரமணியர் பிரதிஷ்டையும் செய்யப்பெற்றன. [illegible] பரிவார தேவதைகளுக்கும் பகல் 11 மணிக்கு முன்னர் ஸ்வாமி அம்மன் விமான [illegible]களுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்று மஹா அபிஷேகம் முதலிய பூஜைகள் நடந்தேறின. இரவு 11-மணிக்கு பஞ்சமூர்த்திகளும் அவைகளுக்குரிய வாகனங்களில் [illegible] வகைகளாலும் பூஷணங்களாலும் அலங்கரிக்கப்பெற்று, தீவர்த்திகளும் வாணங்களும் பிரகாசிக்க, வேதகோஷ்டிகள் பல [illegible] தொடர்ந்துவரவும் பக்தகோடிகள் சூழ்ந்துவரவும் திருவுலாபோந்து 4-மணிக்கு யதாஸ்தானம் வந்தெய்தின.

கும்பாபிஷேகத்திற்கு சுமார் 9000 ரூபா செலவானதாகத் தெரிகிறது. லக்ஷக்கணக்காக செலவிட்டு நடத்தப்பட்ட கும்பாபிஷேகங்களில்கூட இக்கும்பாபிஷேகத்தைப்போல் வைதீககாரியங்கள் வழுவின்றி ஆகமங்களில் ஆற்றலுள்ளவர்களைத்தெரிந்தெடுத்து நடந்திராதென்று பலர் கூறினார்கள். ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்கள் ஆலயத்தின் தற்கால விசாரணை வகித்திருப்பதிலும் அவர்கள் சிவபக்தியில் சிறந்தவர்களானதாலும் சாஸ்திர ஆராய்ச்சியுள்ளவர்களானதாலும் கூடியவரை தக்கோர்களைத்தருவித்து விமரிசையாக நடைபெற்றது.

தர்மத்திற்குப் பாடசாலையா? சண்டைக்குப் பாடசாலையா?—7-2-16 திங்கட்கிழமை கும்பாபிஷேகத்தன்றிரவு 12-மணிக்கு பஞ்சமூர்த்திகளும் எழுந்தருளினவுடன் யஜுர்வேதபாடசாலை மாணவர்கள் முதலில் செல்லவேண்டுமென்ற எண்ணத்துடன் சுவாமி இரதத்தை ஒட்டி அம்மாணவர்களும் அதின் ஸ்தாபகர்களான உ. மு. குடும்பஸ்தர்களும் நின்றார்கள். சிவாகம பாடசாலை மாணவர்கள் தாங்கள் வழக்கம்போல் முன்செல்லுவதற்கு சமயம் பார்த்து நின்றனர். இந்நிகழ்ச்சியை அறிந்த செல்வாக்குள்ள மனுஷ்யர் சிலர் கலகத்திற்கு ஹேதுவின்றி இரு பாடசாலை மாணவர்களும் ஒன்றுமுக் கைகோர்த்துச் செல்லவேண்டுமென்று சொன்னார்கள், அதற்கு சிவாகம பாடசாலை மாணவர்கள் தங்கள் வழக்கத்தை இழக்கமுடியாதென்று சொல்லிவிட்டு முன் செல்லுவதற்கு வழிபார்த்து நின்றனர். இரதங்கள் சிறிது நகர்ந்ததும் உள்ள இடைவெளியில் புகுதவே, யஜுர்வேத பாடசாலை ஸ்தாபகர்களில் சிலரும் பாடசாலையின் சமையற்காரர்களும் ஆகம பாடசாலை மாணவர்களைத் தாக்கினர். பிறகு இருபக்கமும் கூக்குரல் [illegible]கப்பட்டது. சுவாமிகள் தெற்குவீதியில் மேல்புறம் சென்றதும் ஆகமபாடசாலை மாணவர்கள் மட்டும் யஜுர்வேதாத்யயனம் செய்து கொண்டுவந்தார்கள். 11—2—16 தைவெள்ளிக்கிழமையானமையாலும், கிருத்திகையானமையாலும் இரவு 9-மணிக்கு சுப்பிரமணியரையும் அம்பிகையையும் எழுந்தருளச் செய்தார்கள். அப்பொழுதும் யஜுர்வேத பாடசாலை ஸ்தாபகர்கள் எவ்விதத்திலும் ஆகமபாடசாலை மாணவர்களை முன்செல்ல விடுகிறதில்லையென்ற எண்ணத்துடன் தங்கள் பாடசாலை மாணவர்களோடு அதிகமான பிராமணர்களையும் பின்னும் வேண்டும் ஆட்களையும் சேர்த்து வைத்துக்கொண்டு ஸ்வாமியைத் தாங்கிச் செல்வோர்களை நெருங்கி நின்றுகொண்டார்கள். சிவாகம பாடசாலை ஸ்தாபகரும் அவர் சார்பினரும் பாடசாலை மாணவர்கள் சஹிதம் முன்செல்லச் சமயம் பார்த்துக்கொண்டு நின்றதில் உபயகக்ஷியாருக்கும் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்தன. அதில் ஒரு ஐயங்கார் ஆகமபாடசாலை மாணவர்களை அடித்ததோடு ஒரு செட்டியார் சரீரத்திலும் கையைப் போட்டார். உடனே கலகம் அதிகரித்துவிட்டது. இதைப்பற்றியே பொதுஜனங்கள் இரு பாடசாலைகளும் சுவாமியைத் தொடர்ந்து செல்லவிடாமல் தடுத்துவிட்டார்கள் [illegible] வடகலை தென்கலைச் சண்டைபோல் [illegible] புகுந்துவிட்டதுபோலும்.

225

தந்திகள்.

வில்னு என்னும் நகரில் தீ விபத்து.

பிட்ரோக்ராட் பிப்ரவரி 7—

ருஷியாவிலிருக்கும் வில்னு என்னும் நகரில் சிலநாட்களுக்குமுன் ஒரு பெருந் தீ விபத்து சேர்ந்தது. அது ஜெர்மனிய முக்கிய பட்டணமாகிய பெர்லின் என்கிற இடத்திற்கு எட்டியதால் ஜெர்மன் கவர்ன்மெண்டானது வில்னு நகரின் ஜனங்களுக்கு 75,000 மார்க்குகள் அபராதம் விதித்தது.

ருஷியர் பலனடைதல்.

பிட்ரோ கிராட் பிப்ரவரி 8—

ஓர் அறிக்கை சொல்லுகிறதாவது—ரீகா போர்முனையில் பீரங்கிச்சண்டை வெகு மும்முரமாக நடந்தது. துப்பறியும் ருஷியப்படைகளோ சத்துருக்களால் போடப்பட்டிருக்கும் இரும்பு முள்வேலிப் பிரதேசங்களைத் தாண்டிச்சென்று அவர்களைத் துரத்திவிட்டார்கள். பொயர்னு என்கிற இடத்திற்கு வடக்கே ஒரு சுரங்கத்தை ருஷியர் வெடிக்கச்செய்து சத்துருக்களின் அரண்களைச் சேதப்படுத்தினார்கள். உடனே காலாட்படை வந்து, அந்தப் பள்ளங்களை வசப்படுத்திக்கொண்டது மேலும் சத்துருக்களின்மேல் அநேக குண்டுகளையும் எறிந்தது. அவர்கள் அரண்களில் அநேக ஜெர்மன் பிணங்களைக் கண்டார்கள்.

ஜெர்மன் இளவரசர் காயமடைந்தார்.

ஜெர்மன் சக்ரவர்த்தியின் குமாரனாகிய (ஜெர்மன் இளவரசு) பிரின்ஸ் ஆஸ்கர் கிழக்கு [illegible] குண்டு செலும்புகளால் தலையிலும் தொடையிலும் காயமடைந்தாரென்று பெர்லின் பட்டணத்தில் உத்தியோகமுறையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

கிரீஸ் அரசரின் உத்திரவு.

ஏதென்ஸ், பிப்ரவரி 7—

1892-ம் வருஷம் முதல் 1914-ம் வருஷம் வரையில் சேனையில் சேரவேண்டுமென்று விதிக்கப்பட்டிருப்பவர்களிலே வெளிநாடுகளில் இருப்பவர்கள் உடனே சேனையில் வந்து சேர்ந்து யுத்த சன்னத்தமாக வேண்டுமென்பதாக கிரீஸ் அரசர் உத்திரவு செய்துவிட்டார். ஆனால் ருஷியா, துருக்கி, பல்கேரியா,ருமேனியா முதலிய தேசங்களில் வசித்திருக்கும், கிரேக்கர்கள் வந்து சேரவேண்டுமென்று மேற்படி உத்திரவில் சொல்லப்படவில்லை.

போப் சொல்லிய யோசனையைக் நேசக் கட்சியார் அங்கீகரிக்கவில்லை.

ரோம் பிப்ரவரி 7—

பெல்ஜியத்தைத் திருப்பிக்கொடுத்துவிடும்படி சத்துருக்களுடன் உடன்படிக்கை செய்துகொள்ளும்படி நேசக் கக்ஷியாருக்கு போப் என்னும் ரோமன் காதோலிக் கிறிஸ்தவர்களின் மதாசாரியார் சில நாட்களுக்கு முன் யோசனை சொன்னார். அதற்கு நேசக் கக்ஷியைச் சேர்ந்தவர்களோ ஜெர்மனியைத் தோற்கடிக்கும் வரையில் அப்படிச்செய்வது சரியல்லவென்று மரியாதையுடன் பிடிவாதமாகப் பதிலளித்தார்கள்.

பிரஞ்சுக்காரருக்கும் பல்கேரியருக்கும் சண்டை.

ஸலோனிகா, பிப்ரவரி 7—

ஸெர்வியாவிலிருந்து நேசத்துருப்புகள் பின்வாங்கியபின், ஸெர்வியாவுக்கும் கிரீஸுக்கும் மத்தியிலுள்ள எல்லைப்புறத்துக்குத் தெற்கே அரைமைல் தூரத்திற்கப்பாலுள்ள இடத்தில் பல்கேரியத் துருப்புகளுக்கும் பிரஞ்சுத்துருப்புகளுக்கும் முதன் முதல் நடந்த சண்டையிலே, பிரஞ்சுக்காரரில் இருவர் சேதமடைந்தனர். பல்கேரியருக்கு எவ்வளவு சேதமென்று தெரியவில்லை பிரஞ்சுப் பாராப்படைகளோ சத்துருக்களின் சேனை எவ்வளவென்பதை அறியமுடியால் மிகவும் சுறுசுறுப்பாய் இருக்கின்றனர்.

ஸெர்வியரும் ஆஸ்டிரியரும்.

பாரிஸ், பிப்ரவரி 7—

டுராஸோ நகரில் ஆஸ்டிரியரை ஸெர்வியர்கள் எதிர்த்தடித்து விட்டார்கள்.

ஸெர்விய இளவரசர் காப்ரியூ நகரம். போய்ச்சேர்ந்தார்.

காப்ரியூ, பிப்ரவரி 7—

ஸெர்விய இளவரசர் ஒரு பிரஞ்சு டார்பிடோ படகில் ஏறிக்கொண்டு காப்ரியூ வந்து சேர்ந்தார் அச்சமயம் அவர் சந்தோஷ ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டார்.

சீனாவில் கலகம்.

பெக்கின், பிப்ரவரி 7—

கவர்ன்மெண்டறிக்கை யொன்று பின் வருமாறு சொல்லுகிறது:—

ஸூபோ என்னும் நகருக்கு வடகிழக்கே 16 மைல் தூரமுள்ள ஓரிடத்தில் கலகக்காரர்கள் கவர்ன்மெண்டுத் துருப்புகள் தோற்கடித்துவிட்டனர் மேலும் அத்துருப்புகள் முக்கியமான ஓரிடத்தைப் பிடித்துக்கொண்டதோடு கலகக்காரர்களான 300 பெயர்களில் சிலரைக் கொன்றும் சிலரைச் சிறைபிடித்துமிருக்கிறார்கள். ஸூபோ நகரை நோக்கியும் அத்துருப்புகள் போகின்றனர்.

போலீஸார் உஷாராய் இருக்கின்றனர்

நியூயார்க், பிப்ரவரி 7—

சமீபத்தில் நடந்த அக்கிரமங் காரணமாக, போலீஸார் முன்னையிலும் அதிக உஷாராய் இருக்கின்றனர். பூமியின் கீழ் செல்லும் ரயில்வண்டிகளிலே போகும் பிரயாணிகளில் மூட்டைமுடிச்சு கொண்டுபோகிறவர்களைப் போலீஸார் நிறுத்தி சோதனை போட்டு வருகிறார்கள் பெரிய பாலங்களெல்லாம் போலீஸாரால் காக்கப்பட்டு வருகின்றன. பாலங்களின் கீழே செல்லும் கப்பல்களின் மீது எவரேனும் வெடிகுண்டு போடாதிருக்கும்படியே அவ்விதம் பாலங்கள் காவல் செய்யப்படுகின்றன.

பார்லிமெண்டு சபை.

லண்டன், பிப்ரவரி 8—

பார்லிமெண்டு சபை திறக்கப்படும்போது நமது சக்ரவர்த்தி வரமாட்டாரென்று உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது.

ஆகாயக் கப்பல்களினின்றும் லண்டன் பட்டணத்தைப் பாதுகாத்தல

லண்டன், பிப்ரவரி 7—

பிரிட்டிஷ் சரக்குகளை ஏற்றிக்கொண்டு வரும் கப்பல்களில் சம்பவிக்கும் அபாய வெடி விபத்துகளையும் தீவிபத்துகளையும் பற்றி யோசித்து, வியாபார போர்டு கப்பல் சொந்தக்காரர்களுக்குப் பின்வருமாறு எச்சரிக்கை செய்கிறது:—

கப்பல் சொந்தக்காரர்களும் வியாபாரிகளும் தங்களுடைய கப்பல்களில் அல்லது கப்பலிலிருக்கும் சரக்குகளில், சத்துருத் தாருக்குச் சம்பந்தப்பட்டிருக்கும் வேறு எந்த வியாபார கம்பெனிக்கும் யாதொரு சம்பந்தமுமில்லாமலிருக்கிறதாவென்று முன்னதாகவே நன்கு தெரிந்துகொள்ளவேண்டும்

பிரிட்டிஷ் கப்பல் முழுகிற்று

'பாக்செவி' என்கிற பிரிட்டிஷ் கப்பல் முழுகிப்போய்விட்டது. அதிலிருந்த இரண்டாவது உத்தியோகஸ்தர் (கப்பற்தலைவருக்கு அடுத்த உத்யோகஸ்தர்) முழுகிப்போய்விட்டார்.

டென்மார்க் கடற்கரையில் ஜெர்மன் யுத்தக்கப்பல் முழுகிற்று.

கோபன்ஹேகன் பிப்ரவரி 7...

டென்மார்க் தேசத்தின் வடபாகத்திலிருக்கும் காடிகெட் ஜலசந்தியில் ஒரு பெரிய கப்பல் முழுகிப்போய்விட்டது. அது ஒரு ஜெர்மன் யுத்தக்கப்பலென்று நம்பப்படுகிறது. ஆபத்துக்குறியான சமாச்சாரங்கள் கொஞ்சம் நேரம் வந்தன. அவையும் திடீரென்று நின்றுபோய்விட்டன. கம்பியில்லாத தந்தி மெஷினும், இன்னும் மற்ற சாமான்களும் "ஆன்ஹோல்ட்" என்கிற இடத்திற்கு எதிராக "ஸ்வீடன்" தேசத்தைச்சேர்ந்த கடற்கரையில் காணப்பட்டன.

ராணுவச் சேவகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட போர் வீரர்களுக்கு ஏற்பாடு.

லண்டன் பிப்ரவரி 7—

ராணுவச்சேவகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட போர்வீரர்களுக்கு பிரிட்டிஷ் ஜீவனஞ்செய்துகொள்வதற்காக கொஞ்சம் நிலங்களையும், சாமான்களையும் வாங்கிக்கொள்ளவும் விற்பனைசெய்யவும் ஐக்கியச் சங்கங்களையும் அவர்களுக்குத் தேவையாயிருக்கும் பொருளுதவிக்காக விவசாய ஐக்கிய நாணயச்சங்கங்களையும் ஏற்பாடுசெய்யவேண்டுமென்றும், இந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்வதற்காக முப்பது லக்ஷம் பவுன் தேவையாயிருக்கிறதென்றும், கவர்ன்மெண்டு கமிட்டி சிபார்சு செய்கின்றது.

நியூ பௌண்ட்லாண்டின் தீர்மானம்

ஸெயிண்டு ஜான்ஸ் பிப்ரவரி 7—

நியூ பௌண்ட்லாண்டிலிருக்கும் ராணுவச் சேனையையும் கடற்படையையும், இரட்டிப்பாகப் பலப்படுத்தவேண்டுமென்று அந்த கவர்ன்மெண்டு தீர்மானஞ்செய்துவிட்டது.

கனடா பார்லிமெண்டில் தீ விபத்து.

பார்லிமெண்டு சபையில் தீ விபத்து தற்செயலாக சேர்ந்ததென்று போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அபிப்பிராயப்பட்டுக்கொண்டிருந்தபோதிலும், ஜெர்மானியர்கள் தான் அந்தக்கட்டடத்தைக் கொளுத்தினார்களென்று ஜனங்கள் வெகுவும் நம்பியிருக்கிறார்கள். இதனால் ராணுவச்சேவகத்திற்கு சேரவேண்டுமென்று ஜனங்கள் அதிகமாய் ஆரம்பித்துவிட்டார்கள். இனிமேல் சத்துருக்களிடமிருந்து அப்படிப்பட்ட [illegible] நேராதபடி ராணுவ உத்தியோகஸ்தர்களும் போலீஸ் உத்தியோகஸ்தர்களும் தகுந்தபடி முன் ஜாக்கிரதையுடன் இருந்துகொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் முதல் மந்திரியாகிய மிஸ்டர் ஆஸ்க்வித்தும் யுத்த மந்திரியாகிய லார்ட் கிச்னரும், இதர குடியேற்றநாடுகளைச் சேர்ந்தவர்களும், நேசகக்ஷியைச் சேர்ந்தவர்களும், தங்களுடைய அநுதாபங்களைக் காண்பித்து கடிதங்களை அனுப்பினார்கள். சத்துருக்கள் கொஞ்சமேனும் இரக்கமில்லாமல் செய்த இந்த அக்ரமமான காரியத்தைக் குறித்த அபவாதம் அவர்கள்பேரில் மிகவும் ஆக்ரோஷமாயிருக்கிறதென்றும், கனடாவுக்கு இந்த விபத்து சேர்ந்ததைப்பற்றி அது அநுதாபப்படுகிறதென்றும், மிஸ்டர் ரெட்மாண்டு அமெரிக்காவைச்சேர்ந்த கனடாவின் முதல் மந்திரியாகிய ராபர்ட் போர்டன் என்பவருக்கு தந்தி சமாச்சாரம் அனுப்பினர்.

தீ விபத்தைப்பற்றி விசாரிக்க ஏற்பாடு

ஒட்டாவா, பிப்ரவரி 6—

பார்லிமெண்டு கட்டடத்தில் நேர்ந்த தீ விபத்தைப்பற்றி விசாரிக்கும்பொருட்டு ஒரு கமிட்டி ஏற்பாடுசெய்யப்பட்டது.

கனடா யுத்த தளவாட கிடங்கு தீ விபத்து.

ஒட்டாவா பிப்ரவரி 7—

கனடாவைச்சேர்ந்த ஒன்டேரியோவில் ஒரு யுத்த தளவாட கிடங்கில் நேர்ந்த தீ விபத்து சம்பந்தமாய் மூன்று ஆஸ்டிரியர்களும் ஜெர்மானியர்களும் பிடித்து கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியா மந்திரி அனுப்பிய செய்தி.

டெல்லி, பிப்ரவரி 8—

இந்தியா மந்திரியிடமிருந்து நேற்றைய தினம் ராஜப்பிரதிநிதிக்கு அனுப்பப்பட்ட தந்தி சமாச்சாரம் பின்வருமாறு:—

பிரிட்டிஷார் பின்வருமாறு சொல்லுகின்றனர்:—லாபஸி கால்வாய்க்கு வடக்கிலும், தெற்கிலும் ஜெர்மன் பீரங்கிப்படைகள் சுறுசுறுப்பாய் இருந்தன. [illegible] ஜெர்மானியர் தகர்த்தனர். [illegible] என்னும் இடங்களுக்கிடையிலுள்ள அரண்களை நாம் தகர்த்தோம். [illegible] விரண்டு இடங்களுக்கும் இடையிலுள்ள [illegible] மேற்புற பாகத்தில் வெடிகுண்டு [illegible]களால் ஏற்பட்ட [illegible] நாம் வசப்படுத்திக்கொண்டோம். 25 முறை இரு பக்கத்து ஆகாயவிமானங்களும் சண்டைபோட்டன. அதில் 5 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன, அவைகள் ஜெர்மன் அரண்களில் வீழ்ந்தன. மற்றொரு விமானமோ [illegible] கீழே விழும்படியாயிற்று. பிரிட்டிஷ் விமானங்களில் ஒன்று திரும்பி வரவில்லையென்பதாக ராய்ட்டர் சொல்லுகிறார்.

பிரஞ்சுக்காரர் பின்வருமாறு சொல்லுகின்றனர்:—பீரங்கிப்படையும் ஆகாயப்படையும் சுறுசுறுப்பாய் இருக்கின்றன. ஷாம்பேன் பிரதேசம் சேதமாகும்படி தகர்க்கப்படுகிறது.

அல்பேனியாவிலே குரோஜா என்னுமிடத்தை வசப்படுத்திவிட்டதாகவும், தங்களது முன்னணிகள் இஷ்மி நதியைச் சேர்ந்துவிட்டதாகவும், ஆஸ்டிரியர் சொல்லுகின்றனர் மான்டினிக்ரோவின் நிலைமை அமைதியாய் இருக்கின்றது.

ருஷியர் பின்வருமாறு சொல்லுகின்றனர்:—டிவின்ஸ்க் நகருள்ள பிரதேசத்திலே ருஷிய அரண்களின்மீது சத்துருவின் ஆகாயப்படைகள் சுறுசுறுப்பாய் நடமாடி வருகின்றன. போர்முனையிலே மற்ற இடங்களில் அற்பமான போராட்டங்கள் நடந்துவருகின்றன.

யுத்தம் ஏற்பட்டதுமுதல் அடைந்தபலன் இன்னதென்று இடாலிய கவர்ன்மெண்ட் அறிக்கை பின்வருமாறு சொல்லுகின்றது.

வெனீஸ், லம்பார்டி முதலிய இடங்களின்மீது படையெடுத்து வருவதற்குச் சாதகமான பாதைகளில் ஆஸ்டிரியருக்கு அநுகூலமாகவுள்ள இடங்களிலிருந்து ஆஸ்டிரியரைப் பின்தள்ளிவிட்டார்கள். ஆஸ்டிரியர் படையெடுத்துவந்து விரோனாவென்று மிகவும் பயப்படும்படி யிருந்ததானது இப்போழுது நீங்கிவிட்டது.

பொது வர்த்தமானம்.

கலெக்டர் மாற்றல்

நமது இராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் மிஸ்டர் லாப்டஸ் டாட்டன்ஹாம் ஐ. ஸி. எஸ். திருச்சினாப்பள்ளிக்கும் அவ்விடத்திய கலெக்டர் மிஸ்டர் வைபர்ட் ஐ.ஸி. எஸ். என்பவர் நமது ஜில்லாவுக்கும் மாற்றப்பட்டிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது.

பட்டாளத்திற்குப் பழக்கல்.

சிலோனைச்சேர்ந்த [illegible] காலிஜியட் ஸ்கூலில் போயிஸ் ஸ்கவுட் என்னும் பட்டாளம் ஒன்று துடங்க எத்தனித்து 4-2-16ல் மேற்படி ஸ்கூலில் ஒரு மீட்டிங்வைத்து மேற்படி போயிஸ் ஸ்கவுட்டுக்கு(Boys scout) பட்டாளத் தலைவர்களை பழக்க எத்தனித்திருக்கிறார்கள் என்று [illegible] நிருபர் தெரிவிக்கிறார்.

கோகலேயின் மரண அப்தபூர்த்தி.

ஸ்ரீமான் கோகலேயின் மரண அப்தபூர்த்தி நாளிது பிப்ரவரி௴ 19௳ வருகின்றது. அத்தினத்தை ஓர் துக்கதினமாகக் கொண்டாடுவதற்காக வேண்டிய ஏற்பாடுகள் பூனாவில் நடைபெறுகின்றன. பூனாவிலுள்ள தக்ஷிண சபையார் அன்று ஸ்ரீமான் காந்தியைக்கொண்டு ஓர் பிரசங்கமும் இந்திய ஊழியச் சங்கத்தார் ஓர் அந்தரங்கக்கூட்டமும் நடத்துவார்கள்.

பம்பாய் மகாணக் கான்பரன்ஸ்

பம்பாய் மாகாணத்தில் சென்ற வருஷம் பூனாவில் இரண்டு தனியான கான்பரன்ஸ் சபைகள் நடந்தேறியன. இவ்வருஷமும் அமிதவாதக்கட்சியார் தங்கள் சபையை பெல்காமில் தனியாக நடத்துவதற்கு ஏற்பாடுசெய்கின்றனராம். சூரத்துக் காங்கிரஸ் பிளவுபட்டதிலிருந்து இரு கக்ஷிகளையும் ஒன்று சேர்க்க எத்தனையோ தலைவர்கள் எவ்வளவு பிரயத்தனப்பட்டும் முடியாது போனது விசனிக்கத்தக்கதே.

ஜெர்மன் கடலடைப்பு.

"ஆர்டிமிஸ்" என்னும் எண்ணெய்க் கப்பலை உடைத்தது ஒரு அமெரிக்கவாசியான காரியமாகும். ஆக ஜெர்மன் நாசகாரிகள் ஒரு டச்சுக்கப்பலை இரவுமுழுதும் தொடர்ந்து தம்முடைய இஷ்டப்படியெல்லாம் அதன் காப்டனை நடத்தி, கடைசியாக ஆர்டிமிஸ் என்னும் [illegible] ஜெர்மன் உத்திரவுப்படி நடக்க [illegible] மிருகத்தன்மையாக ஜெர்மன் கமாண்டர் அதிலுள்ளவர்கள் படகில் ஏறிக்கொள்ளுவதற்குள் தீங்குசெய்ய உத்திரவு கொடுத்தார்.

நாகபட்டணம் நாடகக்கம்பெனி கேஸ்

நாகபட்டணத்தில் ஸ்ரீ ராஜாம்பாள் கம்பெனியார் சென்ற வருஷத்தில் நாடகமாடிக்கொண்டிருந்த காலத்தில் சிலர் ஆர்ந்தமேடையின் [illegible] அந்த ஸ்திரீயைத் தாக்கினதாகக் குற்றம் சாட்டப்பட்டார்கள். 4 பேர்களில் ஒருவர் விடுதலையடைந்தும் 3 பெயர்வழிகள் தலைக்கு 30 ரூபா அபராதமும் கிரிமினல் புரொஸிஜர் கோடு 106வது செக்ஷன்படி சமாதானத்தைக் காப்பாற்றும்படி ஜாமீன் கொடுக்கும்படியும் தீர்ப்பளிக்கப் பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

புதுக்கோட்டை மகாராஜாவின் பிறந்தநாள் கொண்டாட்டம்

ஹிஸ் ஹைனஸ் புதுக்கோட்டை மகாராஜா அவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டம் நாளது பிப்ரவரி௴ 11௳ வெள்ளிக்கிழமைக்குத் தள்ளிவைக்கப்பட்டிருந்தவாறே அன்றுதினம் வெகு விமரிசையாக நடந்தேறியது மகாராஜாவும் மகாராணியாருடன் அன்று மாலை 6 மணிக்கு டவுன்ஹாலுக்கு வந்து சேர்ந்ததும் சபைபோராளும் இவர்களாலும் வரவேற்பு உபசாரம் கூறப்பெற்று குசிகளின் சதிர்க்கச்சேரியைக் கண்டு சங்கீதக் கச்சேரியைச் செவியுற்றுக்களித்துத் திரும்பினர்.

Best copy available

திருப்பர் கடிதங்களின் தொடர்ச்சி.

புதுவயல்.

இக்கூம் ராக்ஷஸஹு தைமீ 19௳ புதுவயல் வடபாதபுரம் ஸ்ரீமான் வெ. பெரி. வீர விரப்பசெட்டியாரவர்களுக்குச் சஷ்டியப்தபூர்த்தி வைபவம் மிக்க விமரிசையாகவும் தக்க முறைமையாகவும் நடைபெற்றது. அன்று மாலை 3 மணிக்குக் கோசர் வித்தியாபாதுப் பத்திராதிபர் பிரமஸ்ரீ எஸ். சாமிநாதய்யரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் அடியிற்கண்ட பண்டிதர்களாற் பிரசங்கஞ் செய்யப்பட்டது. தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ அ. கோபாலையரவர்களும், பிரமஸ்ரீ மெ. வெ. கோவிந்தராஜ ஐயங்காரவர்களும் முறையே, "பிதா மாதர் பரிபாலனம்" "தாரதாரமதர்மம்" என்னும் விஷயங்களை மிகவும் விரித்தும் அழகாகவும் பிரசங்கஞ்செய்தார்கள். அக்ராசனாதிபதியவர்கள் பிரசங்க சாரங்களைத் தெளிவுற விளக்கியும், சஷ்டியப்த பூர்த்தி சம்பந்தமான இவைற்றை எடுத்துக் காட்டியும் முடிவுரை கூறினார்கள். வந்த ஜனோபசாரத்தோடு ஆசாந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்றன. பிரமஸ்ரீ ராமஸ்வாமி ஐயங்காரவர்களும், பிரமஸ்ரீ சிதம்பரமையரவர்களும், தேவாரம் திருவாய்மொழி முதலிய அருட்பாக்களைக் கர்ண மிர்தமாகப் பாடினார்கள். பள்ளிக்கூடம் மதுரான் லீவுவிடப்பட்டது.

21௳ குருவாரத்தன்று 3 மணிக்குச் சபை கூடிற்று. பிரமஸ்ரீ எஸ். சாமிநாதையரவர்களே அக்கிராசனாதிபதியாக விருந்தார்கள். அடியிற்கண்ட உபந்நியாசங்கள் நடைபெற்றன. தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ இராமமூர்த்தி ஐயரவர்கள் "அன்னையும் பிதாவும்" என்னும் விஷயத்தையும், முறையூர், ஸ்ரீமான் சுப. குமாரப்பச் செட்டியாரவர்கள் "சத்தியத்தின் பெருமை" என்னும் விஷயத்தைப்பற்றியும்; முறையூர் ஸ்ரீமான் அருணப்ப பிள்ளையவர்கள் "பெண்கல்வி" என்னும் விஷயத்தைப்பற்றியும், பிரமஸ்ரீ ராமஸ்வாமி ஐயங்காரவர்கள் குண்டோதரனுக்கு அன்னமிட்டத் திருவிளையாடலைப்பற்றியும், பிரமஸ்ரீ வ. மு. இரத்தினசபாபதியவர்கள் "புதியகாலமும் புருஷர்கள் கடமையும்" என்னும் விஷயத்தைப்பற்றியும், பிரமஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரியாரவர்கள் "பக்தி" என்னும் விஷயத்தைப்பற்றியும் விளக்கமாகவும் சுருக்கமாகவும், விரிவாகவும் முறையே பிரசங்கஞ்செய்தார்கள். சோமதெய்வானை என்னும் மாணவியினாலே "பதிவ்ரதம்" என்னும் விஷயம் இனிமையாக யாவரும் மகிழும்படி பேசப்பட்டது. அக்கிராசனாதிபதியவர்கள் தெளிவாக முடிவுரை கூறியபின், சஷ்டியப்த பூர்த்தியின் ஞாபகார்த்தமாக மேற்படி செட்டியாரவர்கள் புத்திரர் ஸ்ரீமான் வீர. சோமசுந்தரச் செட்டியாரவர்களை இயற்றப்பெற்ற "குருசிஷ்யாசார மஞ்சரி" என்னும் புஸ்தகம் சபையிலே படித்து யாவருக்கும் கொடுக்கப்பட்டது. ஸ்ரீமான் சோமசுந்தரச் செட்டியாரவர்களாலே வந்தனோபசாரம் கூற, யாவருக்கும் ஆசாந்தன தாம்பூலாதிகள் வழங்கித் தமிழ்வேத கோஷத்துடன் சபை நிறைவடைந்தது.

☞ விசேஷக்குறிப்பு:—இந்தச் சஷ்டியப்த பூர்த்தியிலே வந்த அந்தணர் முதலிய யாவருக்கும் இன்சொல்லுடன் தானம் கொடுத்ததோடு; பூமியிலே மற்றைய இடங்களிற்போல ஆண் பெண் சிறுவர் முதலியோர்களை அடைத்துவைபாது அன்புடன் பூரி கொடுத்ததும் முன் மாதிரியாகவே வித்வான்களைக் கொண்டு பிரசங்கங்கள் செய்வித்ததும் ஆகிய இச்செயல்கள் தனவைசியர்களாலும் மற்றையோர்களாலும் பாராட்டி அநுசரித்தற்குரியனவாகும். இவ்வூரிலுள்ள எல்லாப் பாடசாலை மாணவர்களுக்கும் சிற்றுண்டி பழம் முதலியன அன்புடன் அளிக்கப்பட்டன. இக் குடும்பமானது இறைவனருளாலே நீடூழிகாலம் சர்வசம்பத்துடனும் விளங்குவதாக

கண்டுகேட்டும் மகிழ்ந்தோன்.

காரைக்குடி.
(8—2—16)

மதுரை வைத் இந்தியன் கம்மர்ஷியல் கார்பொரேஷன் லிமிட்டெட் பங்காளிகளின் கூட்டம் மோட்டார் ஷெட்டில் இன்று பிற்பகல் 5-மணிக்கு கூடிற்று. அதற்கு தேவகோட்டை, மதுரை, கொத்தமங்கலம் இவ்வூர் ஷேர்ஹோல்டர்கள் 19-பேர்வந்திருந்தார்கள். அதில் மதுரைவாசிகள் இருவரும் இவ்வூர்வாசிகள் இருவரும் எக்காரணம்பற்றியோவெளியில் போனவர்கள் வரவில்லை. அவர்கள் இருக்குமிடத்திற்கு ஆளனுப்பிக் கூப்பிட்டும் வரவில்லை. அதன்பிறகு இரவு 9-மணிக்கு கம்பெனியின் விஷயங்கள் பேசப்பட்டன. வருஷாந்திரக் கணக்கையும் பார்த்து அங்கீகரித்தார்கள். இவ்வருஷத்திற்கு மிஸ்டர் பள, சு. அரு. சு. அருணாசலம் செட்டியாரை கம்பெனியின் பிரஸிடெண்டாக நியமிக்கலாயிற்று மீசல் அட்வைஸர் மிஸ்டர் T. ஸ்ரீநிவாசராவர் இந்தியன் கம்பெனி ஆக்ட்டை அநுசரித்து ஆடிட்டரின் கடந்த வருஷத்து ரிப்போர்ட்டில் கண்டபடி பங்கு எடுத்துக் கொள்ளாததினாலும் பங்காளிகளை அவமதிப்பாக லிகித மூலமாய்க் குறிப்பிட்டிருக்கின்றமையாலும் அந்த ஸ்தானத்திலிருந்து நீக்கப்பட்டார். தேவகோட்டைக்கும், காரைக்குடிக்கும் ஸர்விஸ் நடத்துவதற்கு ஒரு கார் வாங்கத் தீர்மானமாயிற்று.

இக்கரிலிருந்து மதுரைக்குப்போக்குவரத்துள்ள ஜனங்களின் தேவைக்கு அதிகமான மோட்டார் ஸர்விஸ்கள் ஏற்பட்டிருக்கின்றன. மேன்மேலும் ஸர்விஸ்கள் ஏற்படுவது, 'தானும் வாழமாட்டான் பிறரையும் வாழவொட்டான்' என்ற முதுமொழிக் கிலக்காகலாம். இப்பொழுது நடைபெறும் ஸர்விஸ்களில், மிஸ்டர் நாகப்பசெட்டியார் செக்ரெட்டரியாகவுள்ள கம்மர்ஷியல் கார்பொரேஷன் லிமிடெட் கார்களும், மெஸ்ஸர்ஸ் அள. அரு. நா. மதுரை மீனாக்ஷி மோட்டார் சர்வீஸ் கார்களும் பிரயாணிகளின் நம்பிக்கையும் மதிப்பையும் பெற்று பிரயாணிகளைக் குறித்தகாலத்தில் சாக்கிரதையுடன் சேர்க்கின்றன. ஏனைய ஸர்விஸ் கார்களை நடத்துகிறவர்கள் தங்களுடைய கார்களைக் கேவலம் ஜட்கா வண்டிகளைப் போல் மதித்துவிடுகின்றனர். காலை 7 மணிக்கு புறப்படும் கார் பகல் 12 மணிக்கு மதுரைக்குப்போகுமென்று உறுதிகூறி பிரயாணிகளை ஏமாற்றி ஏற்றிவிட்டு பிற்பகல் 4 மணிக்குக் கொண்டுபோய்ச்சேர்க்கின்றனர். இவ்வித ஸர்விஸ் கார்களில் அவசர வேலையுள்ளவர்கள் ஒரு தினம் முன்னமே பிரயாணம் செய்யவேண்டும். குறித்த காலப்படி தவறுமலும் பிரயாணிகளின் சௌகரியத்தைக் கவனித்தும் எச்சரிக்கையுடனும் வரம்புகடந்த பிரயாணிகளை அதிகமாகவும் நடத்தப்படும் ஸர்விஸ் கார்களில் மட்டும் பிரயாணிகள் நம்பிக்கையும் மதிப்பையும் வைத்து பிரயாணம் செய்ய விரும்புவர்களே யன்றி மற்ற கார்களில் முதன்முதல் பிரயாணம் செய்தவர் மீண்டும் பிரயாணம் செய்யத் துணியமாட்டார். சில தினங்கட்கு முன்னர் தன கெம்பனி மோட்டார் ஸர்விஸ் கார் மதுரைக்குச் செல்லும்போழுது மதுரைக்கு ஆறுவது மயிலில் ஓர் பாதத்தில் மோதி மேலடாப்பின் தாங்கும் கம்பிகள் முறிந்து அதிலிருந்த பிரயாணிகளில் 24 பேரும் காயமடைந்தனர். இது டிறைவர்களின் அஜாக்கிரதையேயாகும். ஸர்விஸ் கார்களும் தனிக்கார்களும் மலிந்துவிட்டன. அவைகளை நடத்துவதற்கு மெக்கானிசம் தெரிந்த டிறைவர்களாக நியமிக்கப் படாமல் கார்களின் தூசி போக்குகின்றவர்களையும் சமையல் செய்கின்றவர்களையும் ஏவல் புரிகின்றவர்களையும் ஆரம்பத்தில் கிளீனர்களாக நியமிக்கப்பட்டு அன்னோர் பழக்கத்தால் காரை நிறுத்தவும் விடவும் தெரிந்துகொண்ட ஒன்றினாலே அவர்களையும் டிறைவர் ஸ்தானத்திற்கு உயர்த்திவிடுகின்றார்கள். இக்காரணம்பற்றியே நீண்ட காலத்திற்கு உழைக்கும் மேன்மையான கார்கள் விரைவில் அடிக்கடி பழுதுபட்டு அதனை சீர்படுத்த நூற்றுக்கணக்காகப் பணம் செலவாகிறது. ஆகவே மெக்கானிசம் தெரிந்த டிறைவர்களைச் சிறிது சம்பளம் ஜாஸ்தி கொடுப்பதற்கு பின்வாங்கியாமல் நியமித்துக் கொள்ளுவது அபாயத்துக்கு ஹேதுவில்லாமலும் அடிக்கடி கார்கள் பழுதடையாமலிருக்கு மென்பதை சர்வீஸ் கார்களை வைக்க விரும்பும் மனுஷியர்கள் பிரதமத்தில் கவனிக்கவேண்டும்.

காரை வாசி.

ஒரு பிரசங்க நயம்.

தைமீ 17, 18௳களில் (30-1-16 31-1-16) கடாப்பூர் சத்ஜன சபை 4வது வருடப் பூர்த்தியில் ஸ்ரீமான் வித்வான் ஒட்டநத்தம் ஜெகவீர பாண்டியரவர்கள் கல்வி சன்மார்க்கமென்னும் விஷயங்களை யெடுத்துத் தெள்ளியதும் இனியதுமான நடையில் பிரசங்கித்தார்கள். அதனைக் கேட்டுப் பெருமகிழ்வடைந்த யான் லோகோபகாரமாகவிருக்குமெனக் கருதி அதைச் சுருக்கி வரைகின்றேன்.

பரம புருஷார்த்தமாகிய மோக்ஷத்துக்குப் பரம சாதனமாயுள்ளது அறிவென்றும், அஃது இயற்கை செயற்கையென இருவகைப் படுமென்றும், இயற்கையறிவு உள்ளாலும், செயற்கையறிவு நாலாலும் எய்துமென்றும், நாலேயுதிஞ் செயற்கையறிவு இல்லாமல் உள்ளாலெய்தும் இயற்கையறிவு பயன்படாதென்றும், இயற்கையறிவும், செயற்கையறிவும் கண்ணொளியையும் கதிரொளியையும் ஒத்திருக்கின்றன வென்றும் இவ்விரண்டும் ஒற்றுமையுறப் பெற்றவர்களே பெறுதற்கரிய பிறவியைப் பெற்ற பயனை யடைந்தவர்களென்றும், மனிதனை மனிதனுக்குவது செயற்கையறிவே யென்றும், இதன் பெருமையை நோக்கியே (தந்தை மகற்காற்றுமுதவி யவைபத்து முந்தியிருப்பச் செயல்) என்று பொய்யா மொழிபுகன்றதெனவும், ஒத்த பிறப்பாளராயினும் கல்லார் கற்றவரோ டொப்ப மதிக்கப்படாரெனவும், கல்வியே தன்னை யுடையானுக்கு எல்லா நலங்களையும் அளிக்குமென்றும் நாமனைவரும் கல்வியை யவசியம் விரைந்து கசடறக் கற்றல் வேண்டுமென்றும் ஐம்பொறியுணர்ச்சியோடு மனவுணர்ச்சியையுமான் புறப்பெற்றிருத்தல் கற்றற்குச் சாதனமாதலால் அவற்றைப் பெற்றுள்ள நமது பெண்மணிகளும் அவசியம் படித்தல் வேண்டுமென்றும், பண்டைக்காலத்துப் பெண்மணிகளெல்லாம் கற்றுப் பிரகாசித் திருந்தனரென்றும் ஒரு தேசம் முன்னேற்றத்தை யடைய வேண்டுமானால் பெண்கல்வி யபிவிருத்தியாக வேண்டுமென்றும், சிக்கக்குட்டிகளாகிய நாம் பெண்களுடைய தக்கக் கட்டி வயிற்றிலிருந்தன்றோ வந்தோமென்றும், மக்களென்னும் பதம் உயர்வையும், மாக்களென்னும் பதம் இழிவையும் உணர்த்துகின்றன வென்றும் கல்விக்குப் பயன் மனத்தையும் மதியையும் தகுதியான வழிகளிற் செலுத்த வேண்டுமே யென்றும், உயிர்கள் அக்கநீக்கத்தையும் சாத்திணக்கத்தையுமே அவாவி நிற்கின்றவென்றும், சன்மார்க்கர்களுடைய மேதா விலாசமானது மழைத்தாரையை யொத்திருக்குமென்றும், ஆழ்ந்த கருத்தும் அந்தரங்க நன்மையும் சாந்தமும் திண்மையும் சத்தியமு முடைய உயர்குண மனிதனையே உலகம் உற்றதுணையாகப் பற்றி நிற்குமென்றும், கேட்டார் மகிழ கேளாரும் வேட்ப, தொல்காப்பியம், சிந்தாமணி புறநானூறு முதலிய சங்க நூற்களுக்கிணங்கவே கருவி மிகவும் நுணுக்கமாகவும் தெளிவாகவும் பேசினார்கள் சபை சந்தோஷ வெள்ளத் தொழிந்து முடிந்தபின் னெழுந்து கம்ப ராமாயணத்தில் சில கவிகளை எடுத்து அருமையான நயங்களை விளக்கினார்கள். அப்பொழுது கவிகளுடைய கருத்துக்களை மிகவும் நுணுக்கி யுணர்ந்து விரித்து விரித்து விரிக்கும் பெருந்தன்மை வாய்ந்த சேது சமஸ்தான வித்வான் பிரமஸ்ரீ ரா. இராகவையங்காரவர்களையும் மகிபாலன்பட்டி கவிகன்னர் ஸ்ரீமான் கதிரேசச் செட்டியாரவர்களையும், நாமக்கல் பிரமஸ்ரீ கோவிந்தராஜ ஐயங்காரவர்களையும் நினைத்து மகிழ்ந்திருந்தேன்.

சுப. ராம. கந்தசாமிச் செட்டி,
கடியாபட்டி.

பினங்குத் தைப்பூசச் சிறப்பு.

சென்ற தைமீ 6௳ முதல் 9௳வரை நான்குநாட்களிலும் பினங்கு நகரில் நமது வணிகமக்களால் தைப்பூச உத்ஸவம் மிக விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. 6௳ காலையில் பினங்குநகரில் நின்றும் வெள்ளிரதத்திற் சுவாமி புறப்பட்டு பகல் 1-மணிக்குத் தண்ணீர்மலையிலுள்ள தமது ஆலயத்திற்சேர்ந்து நான்குநாளு கொலுவீற்றிருந்து அடியார்களுக்கு அன்னமளித்து 9௳ மாலையில் அங்கிருந்து புறப்பட்டு அழகிய வாணக்காக்ஷியுடன் தமது பினங்கிலுள்ள திருவீட்டிற்கு வந்துசேர்ந்தார். இவ்வுத்ஸவம் இவ்வருஷம் மிகவிமரிசையாக நடந்தேறியது. அதிற் சில விஷயங்களை யீங்கு குறிப்பிடுகிறேன்.

உத்ஸவத்துக்கு ஒருமாதம் முன்னதாகவே பினங்கு நகரத்தார் தங்கள் லௌகிக காரியங்களை ஒதுக்கிவைத்து உத்ஸவத்துக்குற்ற சிறிய பெரிய பெல்வாவேலைகளையும் வெகு சிரத்தையாகத் தாங்களே பார்த்துவருவது மிகவும் கொண்டாடத்தக்கது.

நான்கு நாட்களிலும் ஜாதிமத வித்யாசமின்றியும் எத்தனை ஆயிரம் ஏழைகள் வந்தாலும் மாறும லன்னமிட்டுத் திருப்திசெய்து அனுப்புவது மிக விசேஷமாகும். அதிலும் அக்கைங்கர்யத்தை நகரத்தார் தாங்களே நேரிற் செய்கின்றார்கள். அது அதனினும் இனிது எம்பெருமான் கொலு வீற்றிருக்கும் அழகிய காக்ஷியை கவர்னர் முதல் எல்லா உயர்பதவி உத்தியோகஸ்தர்களும் சீனர்கள் மலாயிக்காரர்களிற் பெரியமனிதர்களும் சாதாரண ஜனங்களும் கூட்டங் கூட்டமாகவந்து தரிசித்து உண்டியலில் நாணயங்களைப்போட்டுச்செல்வது ஆச்சரியமாகும்.

சுவாமி திரும்பிவரும்போது அபூர்வமான வாணக்காக்ஷியைக்காண வந்து கூடியிருக்கும் ஜனங்கட்கு ஒரு யெல்லையில்லை. நூறாயிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்தார்கள்.

சுவாமி புறப்படும்போதும் திரும்பி வரும்போதும் பாதைகளைத் தண்ணீர் விட்டுக் குளிரச்செய்து தந்திக்கம்பிகளை ஒதுக்கிவிட்டும் பந்தோபஸ்துக்கு ஏராளமான சேவகர்கள் உதவியும் மற்றும் வேண்டிய உபகாரங்களையுஞ்செய்து பாதுகாத்துவருகிற பினங்கு கவர்ன்மெண்டாரின் பேருபகாரம் மறக்கற்பாலதன்று.

அம்மட்டோ, வாணங்கள் செய்வதற்காக இந்தியாவிலிருந்துவருகிற வேலையாட்களையும் மருந்துப்பெட்டிகளையும் இனமாக வருஷந்தோறும் ஏற்றிவருகிற B. I. S. N. கப்பல் கம்பெனியாரின் உதவி சிறிதன்று. இதெல்லாம் எம்பெருமானுடையசெயலால் நடைபெறுவதேயாகும்.

இவ்வருஷத்திற் புதிதாக பினங்கு நகரத்தாரின் பொதுச்செலவில், ரூபா 15,000ம் பெறக்கூடிய இரத்தினவேலாயுதம் ஒன்றும், ரூபா 5,000ம் பெறக்கூடிய பதக்கம் ஒன்றும் செய்யப்பெற்று எம்பெருமானுக்குச் சாத்தப்பெற்றிருந்தன. அவற்றின் அழகையும், வேலைப்பாட்டையும், பார்த்தோர திசயிக்கும்படி மிக நேர்த்தியான ஆபரணங்களாக அவை பிரகாசித்திருந்தன. அடுத்த வருஷத்தில் ஒரு இரத்தினக்கிரீடம் செய்வதாகவும் யோசித்திருக்கின்றார்கள். அதுவும்சேர அணிந்தால் அவ்வழகைக்காண ஆயிரங்கண்களேவேண்டும்.

ஏழைகளுக்கு அன்னமிட்டவகையில் நூறுமுட்டை அரிசியும்ம். அதற்குரிய மற்றப்பொருள்களும் செலவாகியிருக்கின்றனவென்றால், சற்றேறக்குறைய 20,000 ஏழைகளுக்கு அன்னமிடப்பட்டிருக்கிறதென்று விளங்குகிறது. இவ்வளவு ஜீவகாருண்யமும், ஈஸ்வரபக்தியுமுள்ள நமது வணிகமக்களுக்கு எம்பெருமான் இன்னும் எல்லா நலன்களையும் தந்து ரக்ஷிப்பாராக.

M. சின்னையாசெட்டி.

புஸ்தக விமர்சனம்.

கல்வி:—இப்பெயர்பூண்ட சிறுபுஸ்தகமொன்று செங்கூன் நவீனகதா புத்தகசாலையாரால் அனுப்பப்பட பெற்றுப் படித்து ஆநந்த மெய்தினோம். இதில் கல்வியின் அத்யாவசியமும், அதனாலாகும் பயனும் உரிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இப்புஸ்தகம் கேட்பவர்க்கெல்லாம் இனமாக அளிக்கப்படுமென்று இப்புஸ்தகத்தின் முதற்பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. புஸ்தகம் வேண்டியவர்கள் 111 நெய்யர் மங்கமாரி வீதி செங்கூன் என்ற விலாசத்திற்காவது 8, சூளை பெருார் சாலை சென்னை என்ற விலாசத்திற்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மஹாத்மாக்கள்:—இப்பெயர்பூண்ட அரிய தமிழ்ப் புஸ்தகமொன்று நம்பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. இதை எழுதியவர் கும்பகோணம் "லோகோபகாரன்" பத்ராதிபர் C. S. இராமகிருஷ்ணய்யரவர்களாவர். இதில் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள், ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள், ஸ்ரீசதாசிவப் பிரம்மம், ஸ்ரீஜெகந்நாத பண்டிதகவி, ஸ்ரீ போதேந்திர சுவாமிகள், திருவிசநல்லூர் ஸ்ரீ ஐயாவாள், முதலிய மஹாத்மாக்களின் அரிய சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இப்புஸ்தகத்தை ஒவ்வொருவரும் வாங்கிப் படிக்கவேண்டியது அத்யாவசியம். யுத்தத்தில் [illegible] சுத்தவீரனும், பாக்களைப்பாடிய [illegible]லனும், ஆராய்ச்சியுடைய ரசாயன[illegible]திரியும், மேனாட்டவரால் கொண்[illegible]படுவர். ஆனால் பாதகண்டமாகிய [illegible]யாவிலோவெனின் ஜீவன் முக்[illegible]ளாகிய பரமாத்மாக்களின் சரித்[illegible]மிகுந்து கொண்டாடப்படும். இப்புஸ்தகத்தின் விலை அணா நான்கு. [illegible] வேண்டியவர்கள் மகளவிலா[illegible] புஸ்தகசாலை கும்பகோணம் என்னும்விலாசத்தில் பெறலாம்.

இதைக் கவனியுங்கள்.

உலகமெங்கும் கியாதிபெற்றுக் கையாண்டுவரும் மருந்துகளின் விபரம்.

1. கெர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.

இது கெர்ப்பஸ்தானத்தில் சதைவளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாத விடாய் யாகாமல் சீதம் பருத்தும் இரத்தம் இருத்தல், பொறுக்கமுடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்ப உற்பத்தி யில்லாதிருப்போர்க்கு அக்ரோகங்களை மாற்றிக் கெர்ப்பம் தரிக்கச்செய்யுமென்பது நிண்ணம்.

11 நாள் மருந்தின் கிரயம் ரூபா 1-0-0

2. வீரியவிர்த்திக்கு பஞ்சாமிர்த லேகியம்.

நிரோகத்தல் பலத்தைக் கொடுத்து வீரிய விர்த்தியை உண்டுபண்ணுவதுடன் எவ்வித இளைப்பு முழங்கால் கப்பு வலி அசதி சீரிவு மூத்திரத்தில் இரத்தம் சீழ்முதல் வயிற்றுக்கப்பு உஷ்ணம் இவைகளைமாற்றி பசிதீவிரம் உண்டு பண்ணி தாதுவைக் கெட்டிப்படுத்தி உடன் பரீக்ஷைக்கும் தயாராயிருக்கும்.

மலக்கட்டுகாமல் கழிக்கும் 11-நாள் மருந்தின் கிரயம் ரூபா 4-0-0

3 பிரமேகவியாதிக்குச் சந்துச் செந்தூரம்.

எவ்வித பிரமேகமும் இம்மருந்தை அருந்தினால் சூரியனைக்கண்ட பனிபோல நீங்கிவிடும்.

11 நாள் மருந்தின் கிரயம் ரூபா 2-0-0

4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.

சரீரத்தின் எந்த இடத்திலும் ஓடிக் குத்தும் வாய்வுகளுக்கும் மற்றை எவ்வித வாய்வுகளுக்கும் இம்மருந்தே கண்கண்டபம். ஐந்து நிமிஷத்தில் குணமாகும்.

14 மாத்திரை புட்டி 1-க்கு ரூபா 1-9-0

5. மேக சஞ்சீவி சூரணம்.

மேகரோகம் உண்டாகிய பின்காணப்படும் தடிப்பு, அரிப்பு, ஊரல் முதலிய சர்வ ரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும்

22 நாள் மருந்து ரூபா 2-0-0

6 இளைப்பு இருமலுக்குச் சுவாசகாசச் சூரணம்.

எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும்.

22 நாள் மருந்து ரூபா 2-0-0

7. பரிமள பற்பொடி.

பல்கூச்சம் இரத்தம் வருதல் துர்நாற்றம் இவைகளைமாற்றி பல் கருக்காமல் முத்துப்போலிருக்கு சுகமணக்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.

டப்பி 1-க்கு ரூ. 0-4-0 டஜன் 1-க்கு ரூ 2-12-0

8. படர்மேகசங்காரி வெண்ணெய்.

மேகரோகத்தால் நிரோகத்தல் விழும் எவ்வித சக்கூல் பத்துப் படைகளையும் 3 வேளையில் குணமாக்கும்?

டப்பி 1-க்கு ரூ 0-4-0. டஜன் 1-க்கு ரூ. 2-8-0

9. தலைவலிக்கு கல்பக பாம்.

பாட்டில் 1-க்கு அணா 4. டஜன் 1-க்கு ரூ. 2-8-0

10 மகாசந்தனாதி தைலம்

இதின் குணம் எழுதி அறாது. அதாவது ஒரே முழுக்கில் மேலான குணத்தையும் அளவிறந்த வாசனையையும் கொடுப்பதும் தவிர வலி உள்ள இடத்தில் தேய்த்து வெந்நீர் விட்டால் உடனே கேட்கும்.

20 பலம் கொண்ட டின்விலை ரூ. 2—8—0

11 மூலிகை சந்தினத்தைலம்.

அபூர்வ மூலிகைகளால் தயாரித்த சகந்த பரிமளமுள்ளது. குணம் சொல்லமுடியாதது. மணத்தில் மிருந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபா பிடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுதும் ஜிலுஜிலுப்புட இருப்பதுமன்றி ஒரு வாரம்வரை பரிமளம் மாறாது.

8 அவுன்ஸ் டின் 1-க்கு 1-0-0

உபயோகிப்பது மருந்துடன் வரும்.

தவறுதீர்கள் இதுசமயம் தவறுதீர்கள்.

உங்களுங்கள் அதிர்ஷ்டத்தைப் பரிக்ஷித்துப் பாருங்கள்.

1 ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனன வருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள் இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்னபடியாகும் இன்னது கிட்டும் கிட்டாதென அடிதம் கிடைத்த கோத்தைக்கொண்டு இன்னவித முடிவு பெறுமென்று ஷண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

1 ஆயுட்பாகம், 2 சந்ததித்திருஷ் தனம் கிடைக்கும், 3 கல்யாணம் சொக்கமா, 4 சாத்திரபாகம் எத்தனை, 5 அது முன்னு பின்னு, 6 புத்திரனுண்டா, 7 தனம் வைத்துப் போவேனு, 8 மரணமாகுமிடம் சுயதேசமா, 9 சொந்த வீடு கிலம் கிட்டுமா, 10 கடன் எப்போது நிவர்த்தியாகும், 11 விவகாரம் ஜெயமா 12 நினைத்த காரியம் முடியுமா.

தனியாக 1 பாகம் சார்ஜ ரூபா 1 முழுத்தொகையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

12 பாகத்துக்கும் சார்ஜ ரூபா 5 பாதி சார்ஜ முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி. யில் அனுப்புவோம்.

விபரந்தெரிய விரும்புவோர் விலாசம் எழுதினால் ஜோதிஷ வைத்திய லிஸ்ட் இனாமாக அனுப்புவோம். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

K. V. கோவிந்தசாமி நாயுடு.
ஜோசியம், வைத்தியம்,
வளையல்கார தெரு
மேலச் சித்திரைவீதி, மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

32—1

இனும்! இனும்!!

தருந்த இலாபம்!!

நமது "மந்தாகினி" என்னும் ஓர் துப்பறியும் தமிழ் நாவலில் ஒரே தடவையில் 5 புஸ்தகங்கள் வாங்குகிறவர்கட்கு உயர்ந்த பற்பொடி டப்பி ஒன்று இனும்!! 10 புஸ்தகங்கள் வாங்குகிறவர்கட்கு ருபாய் ஒன்று (1—0—0) கமிஷன் கழித்து அனுப்பப்படும்.

புத்தகம் ஒன்றுக்கு விலை அணா 10.

விலாசம்.—

எம். கே. என். ஸாமி,
வேள்ளையனூரணி தெரு,
10 தேவகோட்டை.

தைல வகையிற் சிறந்தது!

இராஜ சந்தனாதித் தைலம்.

அகஸ்தியரின் சிடரில் ஒருவரான தேரையரின் தைலவகைச் சுருக்கம் என்னும் நூலின் முறைப்படி, இத்தைலம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆடவர், பெண்டிர், இருபாலாரும் ஸ்நானஞ் செய்துவந்தால் கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளும் தீரும். உஷ்ணத்தைப் போக்கி, குளிர்ச்சியைத் தருவதில் நிகரற்றது. ஒருமுறை பரீக்ஷித்தவர்கள் இத்தைலத்தை விரும்பாமலிரார் என்பது உண்மை.

☞ வேண்டுவோர் அடியிற்கண்ட விலாஸத்துக்கெழுதி V. P. மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

16-பலம் அடங்கிய டின் 1-க்கு ரூ. 2—0—0

ராதா & கோ.,
இராஜசந்தனாதி டெப்போ,
13 கும்பகோணம்.

கிடைப்பது அருமை! மிகவும் அருமை!! இதுவே சமயம்!!!

மிக அருமையான

உருத்திராக்ஷ மணிகள்.

21 முகமுள்ள் உருத்திராக்ஷ மணி 1 விலை	ரூ. 5000.
1 முகம் (ஏகமுகம்) மணி 1 விலை	ரூ. 30000.
கர்ப்ப கௌரி (பாட்) மணி 1 விலை (மூன்று சேர்த்த பிறப்பு)	ரூ. 2000.

இந்த மூன்று மணிகள்தானிருக்கின்றன. இதுசமயம் தப்பினால் கிடைப்பது துர்லபம். வேண்டியவர்கள் எழுதிக் கொள்ளவும்.

To,
The Manager,
SILK PITAMBER & Co,
Benares City.

மானேஜர்,
பட்டுபீதாம்பர கம்பெனி
தாராநகர் தெரு,
காசி.

3

விலை விபரம் லிஸ்ட் இனாமாக அனுப்பப்படும்

பட்டுப் புடவைகள், பட்டு சால்வைகள்.

எங்கள் கம்பெனியில் சொந்தமாக நெசவுக்காரர்களைக்கொண்டு, நெசவு செய்யச் சொல்லியும், நெசவுக்காரர்களிடம் விலைக்கு வாங்கியும் கொழும்பு, பர்மா, தென் இந்தியா முதலிய பட்டணங்களுக்கு, ஏராளமாக பட்டு சரக்குகள் அனுப்பிக்கொண்டு வருகிறோம். இதில் வி. பி. யில் வாங்குகிற வர்த்தகர்களுக்கும் மற்றவர்களுக்கும் சகாயமான விலைக்கு அனுப்பப்படும். காசியில் கிடைக்கக்கூடிய சகல சாமான்களும் ஆர்டர்படி அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள்.

108-மணி கொண்ட ஜெபமாலை 1-க்கு 6 அணா முதல் ரூ. 12 வரையில். விலை அதிகப்படுவதுபோல மணிகள் சிறியதாகவிருக்கும் கழுத்தில் அணிந்துகொள்ளக் கூடிய 33-மணிகள் கொண்ட 6 முக ருத்திராக்ஷ கண்டி 1-க்கு விலை ரூபா 1-முதல் ரூபா 20 வரையிலும், 32-மணிகள் கொண்ட 5 முக ருத்திராக்ஷ கண்டி 1-க்கு விலை 10 அணா முதல் 10 ரூபா வரையிலும் விலைகள் அதிகப்படுவதுபோல் மணிகள் பெரியதாக விருக்கும்

ஸ்ரீ காசி காலபைரவக் கயிர்கள்.

1-சிப்பர் 100-க்கு ரூபா	3	0	0	3 ,,	,,	,,	2	0	0
2 ,, ,, ,,	2	8	0	சிறியது	,,	,,	0	6	0

வெண்பட்டு வேஷ்டிகள்.

நீளம்	அகலம்	விலை ரூபா	நீளம்	அகலம்	விலை ரூபா
4-முழம்	2	4-8முதல் 6-11 வரை	6	3	ரூ. 9முதல் 12 வரை
5 ,,	2½	6 ,, 8 ,,	7 ,,	3	10 ,, 13 ,,
5 ,,	3	7 ,, ,,	8 ,,	3	12 ,, 15 ,,
6 ,,	2½	8 ,, 9 ,,	9 ,,	3	14 ,, 16 ,,
			10 ,,	3	15 ,, 18 ,,

கொலு சாமான்கள்.

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை, வெங்கலத்தால் செய்த செம்பு, குடம், கண்டி முதலிய 32 சாமான்கள் மிகவும் அழகும், நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள,

பெரிய செட்டு 1-க்கு ரூபா 4 0 0 சிறு செட்டு 1-க்கு ரூபா 2 0 0

நயம் கஸ்தூரி தேரை 1-க்கு ரூபா 30-முதல் 75-வரை.

விலாசம்:—

லெ. ஈசுவர அய்யர்
பட்டு பீதாம்பர வியாபாரி,
கேதாரகட்டம்,
S-16 BENARES CITY. ஸ்ரீ காசி.

வைசியமித்திரன் ஆபீசில் கிடைக்கக்கூடிய தமிழ்ப் புத்தகங்கள்.

நாகை-ஸி. கோபாலகிருஷ்ணன் இயற்றிய நாவல்கள்.

கண்ணகி	0	12	0
தனபாலன் I	0	12	0
சந்திரோதயம்	1	0	0
ஆத்மநாதன்	0	8	0

பண்டிதர் T. S. இராஜமையர் இயற்றியவை.

கல்பலதா அல்லது வெளிவராத ரகசியம்	0	14	0
ஹிரீப்பிரியை அல்லது பாண்டி நாட்டுப் பணப்புதையல்	0	12	0
இந்துலீகா	0	8	0
மாதவி அல்லது மாதவனின் மாயக்கோலை	0	6	0

ஸ்ரீமத் கம்பராமாயணம் 2-வது அயோத்தியா காண்டம்	0	10	0
கமலினி	0	10	0
குலசேகரன்	0	10	0
ஞானமிருதம்	0	10	0
பிரேமகலாவதியம்	0	12	0
பிரபோத சந்திரோதயம்	0	10	0
ஜெகதல ஜெகஜ்ஜோதி	0	8	0
தத்துவஞானபோதினி	0	8	0
கர்ணன்	0	2	0
சீறு	0	4	0
லலிதாங்கி	0	8	0
சுதர்ம கலாவதியம்	0	6	0
தசகுமார சரித்திரம்	0	4	0
உஷாபரிணயம்	0	6	0
சந்திரஹாசா	0	8	0
உமா	0	8	0
சின்னத்தம்பி	0	4	0
பாதுகா பட்டாபிஷேகம்	0	8	0
மிருச்சகடிகம்	0	4	0
தாதாவின் தந்திரம்	0	2	0
குசேலோபாக்கியானம்	0	6	0
சிவராத்ரி புராணம்	1	4	0
கந்தபுராண வசனச் சுருக்கம்	0	8	0
மீனலோசனி	0	8	0
பங்கஜாக்ஷி	0	8	0
ஜெயவதி	0	2	0
ஜீவகாருண்யமாலை	0	1	0

குறிப்பு:—இன்னும் பல நாவல்களும் வேறு எல்லாவகையான தமிழ்ப் புத்தகங்களும் நமது ஆபீஸில் விலைக்குக் கிடைக்கும். வெளியூர் வாசிகளுக்குப் புத்தகங்கள் வி. பி. மூலமாய் அனுப்பப்படும். தவிர, வக்காலத்துப் பாரங்கள் முதலான கோர்ட்டுசம்பந்தமான பாரங்களும் நம்மிடம் கிடைக்கும்.

மானேஜர்,
"வைசியமித்திரன்" ஆபீஸ்.
F-23 தேவகோட்டை.

மதிராஸ் மூக்குத்தூள்.

யாவராலும் நன்கு மதிக்கப்பெற்றதும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றதுமான எமது மூக்குத்தூளை எல்லா வகையிலுஞ் சிறந்ததென்று உத்திரவாதஞ் செய்கிறோம். மூக்குத்தூளுக்கு சென்னைப்பட்டணம் பெயர்போனது. இப்பெயர் நெடுநாளாக நிலைத்திருந்தது. தற்காலம் வெளியூர்களில் சிலர் மட்டப் புகையிலையைக்கொண்டு பக்குவம் தெரியாமல் பொடி செய்து பட்டணம் பொடி என்னும் பெயர் வைத்து உபயோகமற்ற தூளைக்கொடுத்து பெயரைக் கெடுக்கின்றனர். மற்றுஞ் சிலர் சென்னைப்பட்டணத்திலேயே இத்தொழிலைச் செய்து பட்டணம்பொடியின் மகத்துவத்திற்கு எவ்வளவோ தாழ்வு செய்கிறார்கள். இதனால் நம்பமான இடங்களைப்பற்றியுஞ் சந்தேகிக்க இடங்கொடுக்கின்றது. எமது மூக்குத்தூளைப்பற்றி உள்ளூர் வெளியூர்களில் ஒருவராவது புகழா திலில்லையென்கிற விஷயத்தைப்பற்றி அறியும்பொருட்டு கனவான்கள் எமது பொடியை ஒருமுறை தருவித்துப் பார்த்தால்தான் விஷயம் வெளிப்படும். விசை 1-க்கு ரூபாய் 3. அரை விசைக்கு ரூ. 1—8—0. தபால் சார்ஜ் பிரத்தியேகம். தபால் செலவு உள்பட,

8 பலம் கொண்ட 1-சேர் ரூ. 1-0-0.
4 பலம் கொண்ட ½-சேர் ரூ. 0-9-0.

கே. பி. மணி அண்ட் கோ,
இராயபுரம், சென்னை.

15

Printed and Published by S. T. Ramanathan Chettiar at the 'Vysiamitran' Press., Devakota.

END OF
ISSUE